## 1. நிதிக் கூற்றுக்கள்

### 1.1 மறுப்பு அபிப்பிராயம்

இலங்கை துறைமுக அதிகார சபையின் நிதிக்ற்றுக்கள் ''அதிகாரசபை'' மற்றும் அதன் நிர்வாகக் கம்பனியின் ''தொகுதி'' ஒன்றித்த நிதிக்கூற்றுக்கள் உட்பட 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அகல்விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்கள் தொடர்புடைய குறிப்புக்கள் மற்றும் முக்கியமான கணக்கீட்டுக் கொள்கைகளினதும் ஏனைய விளக்கத் தகவல்களினதும் பொழிப்புக்களை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தினதும் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புகளும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

அதிகாரசபையின் நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக நான் கருத்தொன்று தெரிவிக்கவில்லை. மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை பகுதியில் கலந்துரையாடப்பட்டுள்ள விடயங்களின் முக்கியத்துவம் காரணமாக இந்த நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக கணக்காய்வு அபிப்பிராயம் ஒன்றிற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்காக போதியளவு மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகள் பெற்றுக் கௌள்வதற்கு எனக்கு முடியாமல் போனது.

### 1.2 மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 பந்தியில் விவரிக்கப்பட்ட விடயங்களின் அடிப்படையில் எனது அபிப்பிராயம் மறுக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி.) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள், எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பகுதியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது மறுப்பு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு என்னால் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வு சான்றுகள் போதியளவாகவும் மற்றும் பொருத்தமானதும் என நம்புகின்றேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, அதிகாரசபை தொடர்ந்தியங்கும் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாக காணப்படுவதுடன், தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை முகாமைத்துவமானது அதிகாரசபையின் கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர

தொடர்ந்தியங்கும் அடிப்படையின் மீது கணக்கீடு செய்தல் மற்றும் அதிகாரசபையின் தொடர்ந்தியங்குவதற்கு உரிய விடயங்களை வெளிப்படுத்துதல் முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

அதிகாரசசபையின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் அதிகாரசபையின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு தனது அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பாக புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் விடயப்பரப்பு (நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு)

---

ஒட்டுமொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்து நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பிண்ணணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- வெளியிடப்பட்ட கணக்காய்வு அபிப்பிராயத்திற்கு அடிப்படை ஒன்றென பெற்றுக் கொள்ளும் போது மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக் கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தினை இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக் கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும், போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிராயத்திற்கு அடிப்படையாகும். தவறு ஒன்றின் மூலம் ஏற்படும் தாக்கங்களை விட மோசடி ஒன்றின் மூலம்இடம்பெறும் பொருண்மையான பிறழ் கூற்றினை இணங்காணாமையால் எழும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன், தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- அதிகார சபையின் தொடர்ந்து செயற்படுவதற்கு சபைக்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டியதுடன், அந்த வெளிப்படுத்தல்கள் போதியளவினதாக காணப்படின் எனது அபிப்பிராயத்தை மாற்றி அமைக்க வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் மீது தொடர்ந்தியங்கும் நிலைமை முடிவடையலாம்.

- வெளிப்படுத்தல்கள் உள்ளடக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும உள்ளடக்கத்திற்காக அடிப்படையான கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் பொருத்தமான மற்றும் நியாயமான வகையில் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன என மதிப்பீடு செய்தல்.

வேண்டப்பட்டவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- அதிகாரசபையின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- அதிகாரசபையின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் அதிகாரசபை இணங்கியிருந்ததா என்பதும்,

- தனது அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணக்கமின்மை

| | உரிய நியமங்களுடன் தொடர்பு மற்றும் இணக்கமின்மை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | இலங்கை கணக்கீட்டு நியமம் இலக்கம் 16 இன் 51 ஆம் பந்தியின் படி நிலையான சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் மற்றும் சிதைவுற்ற பெறுமதி வருடாந்தம் மீளாய்வு செய்யப்பட்டு வித்தியாசம் ஏதும் காணப்படின் அந்த வித்தியாசத்தை இலங்கை கணக்கீட்டு நியமம் 08 இன் பிரகாரம் கணக்குகளுக்கு சீராக்கல் மேற்கொள்ளப்பட வேண்டியிருந்த போதிலும், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் காலி துறைமுகத்திற்கு சொந்தமாக காணப்பட்ட நினைவுப் பெறுமதி ரூபா 4,443 மில்லியனிற்கான 11 வகையான சொத்துக்கள் மீளாய்வுக்கு ஆளாக்கப்பட்டு இருக்கவில்லை. | காலி துறைமுகத்தின் பொறியியல் பிரிவின் சொத்துக்கள் பதிவேடு மீண்டும் மதிப்பீடு செய்தல் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. ஏனைய பிரிவுகளின் சொத்துக்கள் பதிவேடுகளையும் விரைவாக மீண்டும் மதிப்பீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | சொத்துக்களின் ஆக்கபூர்வமான ஆயுட்காலம் வருடாந்தம் மீளாய்வு செய்வதற்கு முகாமைத்துவம் நடவடிக்கை எடுக்க வேண்டும். |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் 55 ஆம் பந்தியின் படி செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்த பொருத்தமான நிலைமையை அடைந்துள்ள சந்தர்ப்பம் முதல் ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்களின் பெறுமானத்தேய்வு மேற்கொள்ள வேண்டும். எனினும் 2019 திசெம்பர் 23 திகதி அதிகார சபைக்கு கிடைத்து செயற்பாட்டு அலுவல்களுக்காக பயன்படுத்தப்பபட்டிருந்த இரண்டு ஏவுபடகுகளின் பெறுமதி ஆகிய ரூபா 495 மில்லியன் தொகை 2021 திசெம்பர் 31 திகதி வரை மூலதனப்படுத்தி உரிய முறையில் பெறுமானத்தேய்வு கழித்திருக்கவில்லை. குறிப்பிட்ட கொடுப்பனவு நிதிநிலைமைக் கூற்றில் நடைமுறைச் சொத்துக்களின் கீழ் "பாதீட்டு ஏற்பாடுகள் இன்றிய வெளிநாட்டு கொள்வனவு முற்பனவு" கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. இதன் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் | இணங்குகின்றேன்.<br><br>இரண்டு ஏவுபடகுகளை மூலதனப்படுத்துவதற்குரிய ஆவணங்கள் கிடைக்கப்பட்டுள்ளதுடன் அந்த படகுகள் இரண்டையும் தற்போது மூலதனப்படுத்தப்பட்டுள்ளது.<br><br>2021.12.31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட ரூபா 1808.56 மில்லியன் தொகைக்கான மீதியில் தற்போது ரூபா 304.5 மில்லியன் தொகைக்குரிய முற்பணங்கள் தீர்க்கப்பட்டுள்ளது. மீதித் தொகையை சீராக்கல் செய்வதற்காக தேவையான ஆவணங்கள் பெற்றுக் கொண்டு குறிப்பிட்ட சீராக்கல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 16 இன் பிரகாரம் சொத்துக்கள் தொடர்பான கட்டுப்பாடு சொத்துக்களின் ஆபத்துக்கள் மற்றும் நலன்கள் அதிகார சபைக்கு பொறுப்பாக உள்ளதுடன் நடைமுறை அல்லாத சொத்துக்களின் கீழ் கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆதனங்கள், பொறித்தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் மேற்கூறிய தொகையினால் குறைவாக குறை கணிப்பீடு ஏற்பட்டிருந்தது.<br><br>மேலும், அந்த வெளிநாட்டு கொள்வனவு முற்பணக் கணக்கில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு ரூபா 1,808.56 மில்லியனுக்கான மீதியில் கொடுப்பனவு பூர்த்தி செய்யப்பட்டிருந்த ஆனால் செலவுகள் என வருமானக் கூற்றிற்கு இனங்காண்பதற்கு அல்லது இனங்காணப்பட்ட கொள்கையின் அடிப்படையில் சொத்துக்களை மூலதனப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படாத ரூபா 223.57 மில்லியனுக்கான உதிரிப்பாக கொள்வனவு காணப்பட்டது. இதன் காரணமாக ஆண்டிற்கான இலாபம் மற்றும் நடைமுறையல்லாத சொத்துக்கள் அப் பெறுமதியினால் மிகை கணிப்பு/ குறை கணிப்பு ஏற்பட்டிருந்தது. மேலும் மீதித் தொகையில் தற்போது கிடைத்துள்ள ஆனால் மூலதனப்படுத்தியிருக்காத சொத்துக்கள் மற்றும் இனங்காணப்படாத செலவுகள் இந்தக் கணக்கில் நீண்டகாலமாக பேணிச் செல்லப்படுவதாக அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 24 இன் 18, 19 மற்றும் 21 பந்திகளின் படி நிதியாண்டிற்குரிய தொடர்புடைய தரப்பினருடன் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்களின் தன்மை, மீதிகள் மற்றும் நிதிக்கூற்றுக்களுக்கு ஏற்பட்டுள்ள தாக்கம் தொடர்பாக பயன்படுத்துவோருக்கு விளங்கிக் கொள்ளக்கூடிய தேவையான தகவல்கள் தொடர்புடைய தரப்பினரின் கொடுக்கல் வாங்கல்களின் கீழ் வெளிப்படுத்த வேண்டும். அவ்வாறாயினும், அதிகார சபையினால் ஹம்பாந்தோட்டை துறைமுகத்தின் சொத்துக்கள் நீண்டகால குத்தகை அடிப்படையில் உரித்தாக்கல் தொடர்பாக, 2017 ஆண்டு ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவை (HIPS) கம்பனியினால் மற்றும் | இணங்குகின்றேன்.<br><br>எதிர்காலத்தில் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு ஒன்றின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் தொடர்புடைய தரனப்பினருடன் நடைபெற்ற அனைத்து கொடுக்கல் வாங்கல்களுக்குரிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு ஒன்றின் மூலம் வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்தது. |

| | | | |
|---|---|---|---|
| | ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக தொகுதி (HIPD) கம்பனியினால் கிடைத்திருந்த ரூபா 169,479 மில்லியன் தொகை, மீளாய்வாண்டிற்கான தேறிய இலாபம் கணிக்கும் போது வருமானக் கூற்றிற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது வருடாந்த பிற்போடப்பட்ட குத்தகை வருமானம் ஆகிய ரூபா 1,713 மில்லியன் தொகை மற்றும் புதிய எண்ணெய் தாங்கி ஒன்று மற்றும் தீப்பாதுகாப்பு முறைமையொன்று நிர்மாணிப்பதற்காக ஜயா கன்டேனர் டர்மினல் கம்பனியினால் 2021 ஆண்டின் போது அதிகார சபைக்கு ரூபா 95.7 மில்லியன் தொகை வழங்கள் ஆகிய தொடர்புடைய தரப்பினருடன் மேற்கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்களுக்குரிய தகவல்கள் நிதிக்கூற்றுக்களான குறிப்புக்களின் மூலம் வெளிப்படுத்தியிருக்கவில்லை. | | |
| (ஈ) | 2017 நவம்பர் முதல் செயற்பாட்டு அலுவல்கள் நிறுத்தப்பட்டிருந்த அதிகார சபையினால் நிருவகிக்கும் கம்பனி ஒன்றான மாகம்புர துறைமுக முகாமைத்துவ சேவை (தனியார்) கம்பனியினால் 2014 ஆண்டின் போது கப்பல் எண்ணெய் கொள்வனவு செய்வதற்காக தனியார் வங்கி ஒன்றில் இருந்து 24 மில்லியன் அமெ.டொலர்களுக்கான கடன் தொகையொன்று பெற்றிருந்தது. அவற்றில் 22.3 மில்லியன் அமெ.டொலர்கள் இந்த அறிக்கை திகதி வரை தீர்த்திருக்காததுடன், கம்பனியில் நிதிக்கூற்றுக்களின் படி கடனை தீர்ப்பதற்காக கம்பனியின் போதியளவு சொத்துக்கள் காணப்படவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. எவ்வாறாயினும், குறிப்பிட்ட வங்கியினால் இந்த கடனை அறவீடு செய்வதற்காக நிர்வகிக்கும் கம்பனிக்கு மற்றும் அதிகார சபைக்கு எதிராக இரண்டு வழக்குகள் 2020 ஆண்டின் போது கொழும்பு மாவட்ட நீதிமன்றத்தின் தாக்கல் செய்யப்பட்டு பேணிச் செல்லப்பட்டு காணப்பட்டது. இது தொடர்பாக அதிகார சபையின் பிரதான சட்ட உத்தியோகத்தரினால் ரூபா 4,465 மில்லியனுக்கான இப் பொறுப்புக்களை தீர்ப்பதற்காக | இணங்குகின்றேன்.<br><br>கணக்கீட்டு நியமங்களின் படி நிகழத்தக்க பொறுப்புக்களுக்கு ஒதுக்கம் மேற்கொள்வதற்கு தேவையில்லை. | சட்டப் பிரிவினால் பரிந்துரைக்கப்பட்டவாறு ஏற்படக்கூடிய நிதிசார் ஆபத்தை தவிர்க்க முடியாமையால் இலங்கை கணக்கீட்டு நியமத்தின் பிரகாரம் நிகழத்தக்க பொறுப்புக்களுக்காக ஒதுக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமென. |

| | | | |
|---|---|---|---|
| | வருடாந்த நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகள் மேற்கொள்ளும் படி நிதிப்பிரிவின் தலைவருக்கு அறிவித்திருந்தது. எவ்வாறாயினும், இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37, 10(அ) பந்தியின் படி மேற்கூறிய பொறுப்புக்காக நிகழத்தக்க பொறுப்பு ஒதுக்கம் மேற்கொண்டிருக்காததுடன், அதன் காரணமாக மீளாய்வாண்டின் அதிகார சபை இலாபம் ரூபா 4,465 மில்லியன் தொகையினால் மிகைக் கணிப்பு ஏற்பட்டிருந்தது. | | |
| (உ) | இலங்கை கணக்கீட்டு நியம இலக்கம் 37 இன் 85 ஆம் பந்தியின் படி ஒவ்வொரு ஏற்பாடுகளுக்கும் உரிய கடப்பாட்டுத் தன்மை தொடர்பாக குருகிய விபரமொன்று, செலுத்துவதற்கு நேரிடும் காலப்பகுதி மற்றும் நிச்சயமற்ற தன்மை தொடர்பாக வெளிப்படுத்த வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிதி நிலைமைக் கூற்றில் உட்படுத்தப்பட்டிருந்த ரூபா 6,706 மில்லியனுக்கான உரிமைகள் கோரக்கூடிய ஒதுக்கங்கள் தொடர்பாக வெளிப்படுத்தல் மேற்கொண்டிருக்கவில்லை. | இணங்குகின்றேன்.<br><br>2022 திசெம்பர் 31 திகதியில் முடிவடையும் நிதியாண்டுக்கு உரிய நிதிக்கூற்றுக்களில் சரி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நியமத்தின் பிரகாரம் உரிய வெளிப்படுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென. |

### 1.5.2 கணக்கீட்டு கொள்கைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| நிதிக்கூற்றுக்களுக்கான குறிப்பு இலக்கம் 2.2.2 இன் படி தொடர்புடைய கம்பனியில் முதலீடுகள், உரிமை மூலதன முறைமை அடிப்படையாகக் கொண்டு மதிப்பீடு செய்யப்படுகின்றது என காட்டப்பட்டிருந்தது. மேற்கூறிய கொள்கையின் படி அதிகார சபையை சார்ந்த கம்பனி ஒன்றான ஹம்பாந்தோட்டை சர்வதேச துறைமுக சேவைக் கம்பனியின் (HIPS), 2021 ஆண்டிற்கான நட்டத்தில் இருந்து அதிகார சபையின் இலாப/ நட்ட பகுதியாகிய | இணங்குகின்றேன்.<br><br>கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்கள் இறுதிக் கணக்கு கூற்றுக்கள் தயாரிக்கும் வரை கிடைத்திருக்காமையால் HIPS கம்பனியின் 2021 ஆண்டிற்கான வரைபு நிதிக்கூற்றை அடிப்படையாகக் கொண்டு 2021 இறுதிக் கணக்குகள் தயாரிக்கப்பட்டது. | கணக்காய்வு செய்யப்பட்ட நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு உரிய கணித்தல் மேற்கொள்ளல் மிகவும் சரியானதாகும். |

ரூபா 383.1 மில்லியனுக்கான நட்டம் கம்பனியின் 2021 வரைபு நிதிக்கூற்றின் மீது அடிப்படையாக கொண்டு கணிக்கப்பட்டிருந்தது.

### 1.5.3 கணக்கீட்டு குறைபாடுகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2007/08 ஆண்டு முதல் 2010/11 ஆண்டு வரையான நிதி ஆண்டுகளுக்காக அதிகாரசபையின் வருமான வரி கணிப்பு தொடர்பாக மேன்முறையீடொன்று வரி மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன், அது இதுவரை முடிவடைந்திருக்காமையால் குறிப்பிட்ட ஆண்டுகளுக்கான வரி செலுத்தியிருக்கவில்லை. எவ்வாறாயினும், இதற்காக ரூபா 6,387.4 மில்லியன் தொகைக்கான ஒதுக்கம் நிதிக் கூற்றுக்களில் மேற்கொள்ளப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறான நிதிக் கூற்றுக்களின் படி பெற வேண்டிய தடுத்து வைத்தல் வரி மீதி ரூபா 723.41 மில்லியன் தொகையும், பெயரளவில் வரி செலவு வைத்தல் ரூபா 403.29 மில்லியன் தொகையும் மற்றும் பொருளாதார சேவை வரி செலவு வைத்து ரூபா 1,165.66 மில்லியன் தொகை என காட்டப்பட்டிருந்த போதிலும், மேற்கூறிய வரி ஒதுக்கும் போது இந்த செலுத்த வேண்டிய வரியை எதிரீடு செய்திருந்தது என அவதானிக்கப்பட்டது. இதனால் மேலும், இந்த மீதிகள் பெற வேண்டியவை என காட்ட முடியாத போதிலும், கணக்குகளில் குறிப்பிட்ட சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்டிருக்காமையால் ரூபா 2,292.39 மில்லியன் தொகைக்கான தடுத்து வைத்தல் வரி, பெயரளவில் வரி மற்றும் பொருளாதாரச் சேவை வரி மீளாய்வாண்டு இறுதி வரை பெற வேண்டிய மீதிகள் என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. | புள்ளிவிபர தரவுகளுடன் இணங்குகின்றேன்.<br><br>WHT, ESC, Notional Tax என செலுத்தியிருந்த வரி 2019/20 வருமான வரிக் கூற்று சமர்ப்பித்த போது, முழுமையாக எதிரீடு செய்யப்பட்டது. அதனால் இந்தப் பெறுமதியை மீண்டும் எதிரீடு செய்யும் நிச்சயமற்ற தன்மை ஒன்று ஏற்படாது.<br><br>WHT மூலதப் பிரதிகள் குறிப்பிட்ட வரி கூற்றுடன் வரி ஆலோசனை கம்பனிக்கு அனுப்பப்பட்டு உள்ளதுடன் அதனை சான்றுபடுத்தப்பட்ட ஈ - மெயில் செய்தி சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | சீராக்கல்கள் மேற்கொள்ளப்பட்ட பின்னர் சரியாக கணக்கு மீதிகள் பதிவு செய்யப்படும் என உறுதிப்படுத்த வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | காலி முகத்திடலின் நவீன மயப்படுத்தும் அலுவல்களுக்காக அதிகார சபையினால் 2018 ஆண்டின் போது செலவிடப்பட்டிருந்த ரூபா 7.61 மில்லியன் தொகை, காலி முகத்திடலின் நிர்வாக அலுவல்கள் மேற்கொள்ளும் அதிகார சபையை சேர்ந்த கம்பனி ஒன்றான இலங்கை துறைமுகங்கள் மற்றும் ஆலோசனை கம்பனியினால் பெற வேண்டிய தொகை ஒன்றென அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அத் தொகை குறிப்பிட்ட கம்பனியின் நிதிக் கூற்றுக்களில் அதிகார சபைக்கு செலுத்த வேண்டிய தொகை என்றென காட்டப்பட்டிருக்காததுடன் மேற்கூறிய தொகையை செலுத்த முடியாது எனவும் மேற்கூறிய கம்பனி அதிகார சபைக்கு எழுத்துமூலம் அறிவித்திருந்தது. இதன் காரணமாக, மேற்கூறிய தொகை கிடைப்பது நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்ட போதிலும் நிதிக்கூற்றுக்களில் அதற்காக இழப்பீட்டு ஒதுக்கம் ஒன்று மேற்கொண்டிருக்கவில்லை. | இத் தொகையை பெற்றுக் கொள்வதற்காக தொடர்சியாக கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டது. அதிகார சபையுடன் வருடாந்தம் நிதிக் கொடுக்கல் வாங்கல்கள் கணிசமான அளவு இந்தக் கம்பனியினால் மேற்கொள்ளப்படுவதினால் இந்த நிதியை அறவீடு செய்வதில் வசதியீனங்கள் ஏற்படமாட்டாது. அதன் காரணமாக இழப்பீட்டு ஒதுக்கம் மேற்கொள்ளும் தேவைப்பாடு ஒன்று ஏற்படாது. | இழப்பீட்டிற்காக ஒதுக்கம் மேற்கொள்ள வேண்டும். |
| (இ) | அதிகார சபைக்கு உரித்தில்லாத மற்றும் அதிகார சபையினால் செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளாத ஒலுவில் துறைமுக செயற்திட்டத்திற்காக காணிகளை தனதாக்கியது தொடர்பாக காணிகளை இழந்தோருக்கு செலுத்தியிருந்த நட்டஈட்டுத் தொகை ரூபா 41.8 மில்லியன் தொகையினை நடைபெறுவேலை/ காணி கணக்கில் உட்படுத்தப்பட்டிருந்தது. | இணங்குகின்றேன்.<br><br>ஒலுவில் துறைமுக செயற்திட்டத்திற்காக தனதாக்கிய காணிக்காக மூலதனப்படுத்த வேண்டிய மொத்தச் செலவு இந்த ரூபா 41.8 மில்லியன் தொகையல்லாதுடன், இந்த மூலதனப்படுத்த வேண்டிய மொத்தச் செலவை இனங்கண்டு தேவையான கணக்கு சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | ஒலுவில் துறைமுகம் தொடர்பான உரித்து, பொறுப்பு அல்லது செயற்பாட்டு நடவடிக்கை மேற்கொள்ளும் உரிமை அதிகார சபைக்கு காணப்படாமையால் அதிகார சபைக்கு உரித்தில்லாத இந்த சொத்துக்கள் தொடர்பாக பொருத்தமான விதத்தில் சீராக்கல் மேற்கொண்டு புத்தகங்களில் இருந்து அகற்ற வேண்டும் என. |
| (ஈ) | 2010 ஆண்டின் போது தெற்காசிய நுழைவு முடிவுமுனை (South Asia Gateway Terminal Ltd-SAGT) கம்பனி ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் இலங்கை துறைமுக அதிகார | உரிமை கிடைத்திருக்காமை தொடர்பாக இணங்குகின்றேன்.<br><br>மேலும், குறிப்பிட்ட கம்பனியின் பங்குகள் கிடைத்தல் நிச்சயமற்ற தன்மையில் | குறிப்பிட்ட கம்பனியுடன் கலந்துரையாடி உடன்படிக்கையின் பிரகாரம் பாரந்தூக்கி பொறிகளின் பெறுமதிக்காக அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய |

| | | | |
|---|---|---|---|
| | சபையினால் வழங்கியிருந்த மூன்று பாரந்தூக்கி பொறிகளின் பெறுமதியை பரிமாறிக் கொள்வதற்காக ரூபா 141.63 மில்லியன் பெறுமதிக்கு அந்தக் கம்பனியின் பங்குகளை அதிகார சபைக்கு வழங்கப்படும் என இணங்கியிருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதி வரை குறிப்பிட்ட பங்குகளின் உரிமையை அதிகார சபைக்கு வழங்கியிருக்காததுடன் குறிப்பிட்ட கம்பனியினால் பங்குகளுக்காக செலுத்த வேண்டிய தொகையொன்று இல்லை என 2020 ஆண்டின் மீதிகளை உறுதிப்படுத்துதல் மூலம் பதில் வழங்கியிருந்தது. இது தொடர்பாக தெற்காசிய நுழைவு முடிவுமுனையை கம்பனியுடன் உடன்படிக்கை மேற்கொண்ட கடப்பாடொன்று ஏற்படுத்திக் கொண்டிருக்காத காரணத்தினால் அதிகார சபைக்குரிய கம்பனியின் பங்குகள் கிடைப்பது நிச்சயமற்ற நிலைமை ஒன்று காணப்பட்டதுடன், அதிகார சபை மேற்கூறிய கிடைக்க வேண்டிய பங்குகளின் பெறுமதிக்காக இழப்பீட்டு ஒதுக்கம் ஒன்றும் மேற்கொண்டிருக்கவில்லை. அதே போல், 2022 பெப்ரவரி 02 திகதி மீதியை உறுதிப்படுத்தும் படி கோரிக்கையொன்று மேற்கொண்டிருந்த போதிலும் மீதியை உறுதிப்படுத்தல் சமர்ப்பித்திருக்கவில்லை. | காணப்படுகின்றது என்ற விடயம் தொடர்பாக துறைமுக அதிகார சபையினால் SAGT கம்பனிக்கு அனுப்பப்பட்டு இருந்த 2018.10.31 திகதிய கடிதத்திற்கு பதிலாக அந்தக் கம்பனியினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த 2018.11.15 திகதிய கடிதத்தின் இரண்டாவது பக்கத்தில் மூன்றாம் பந்தியில் குறிப்பிட்ட விடயங்கள் தொடர்பாக உங்கள் கவனத்தை ஈர்க்கின்றேன். அது கீழே மேற்கொள்ளப்பட்டுள்ளது. “In addition, it is important to note that SAGT has acknowledge that in the event of a further call up of capital for the phase I facilities, it is obliged to allot SLPA shares up to the value of USD 2,424,285 as “in kind” shares in terms of the Concession Agreement and pro rata to the cash contribution. Further obligation to be reflected in the books of SAGT” இந்தக் கம்பனியினால் மேற் கூறியவாறு வெளியிட்டிருந்ததனால் கம்பனியினால் தொடர்ந்தும், மூலதனம் அழைக்கும் சந்தர்ப்பத்தில் அந்த எண்ணிக்கைக்கு அதிகார சபைக்கு பங்குகள் பெற்றுக் கொள்வதில் பாதகம் ஏதும் காணப்படவில்லை எனவும் அவ்வாறு பங்குகள் வழங்கப்படுவது தொடர்பாக கம்பனியினால் வெளியிடப்பட்டு ஏற்றுக் கொண்டுள்ளது. | உரிமையினை பெற்றுக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (உ) | வளாகப் பிரிவின் காணிப் பதிவேட்டின் படி ரூபா 633.94 மில்லியன் தொகை பெறுமதியான 19 காணித் துண்டுகள் ஏனைய நிறுவனங்களுக்கு குத்தகை | இணங்குகின்றேன்.<br><br>வளாகப் பிரிவின் காணிப் பதிவேட்டின் படி குத்தகை அடிப்படையில் | அதிகார சபையின் ஏனைய உட்பிரிவுகள் மற்றும் நிதிப் பிரிவுகள் இடையே சிறந்த ஒருங்கிணைப்பு ஒன்று பேணிச் சென்று |

| | | | |
|---|---|---|---|
| | அடிப்படையில் வழங்கப்பட்டிருந்தது என காட்டப்பட்டிருந்ததுடன், நிதிப் பிரிவினால் பேணப்பட்டு வரும் முதலீட்டு ஆதனங்கள் தொடர்பான பதிவேட்டில் அந்த காணிகள் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. இதன் காரணமாக அதிகார சபையின் நிதி நிலைமைக் கூற்றில் முதலீட்டு ஆதனங்கள் ரூபா 633.94 மில்லியன் தொகையினால் குறைகணிப்பு ஏற்பட்டிருந்ததுடன், காணியின் பெறுமதி அந்த எண்ணிக்கையினால் மிகைக் கணிப்பாகியிருந்தது. | வழங்கியிருந்தது என குறிப்பிடப்பட்டுள்ள காணிகள் நிதிப் பிரிவின் பதிவேட்டில் முதலீட்டு ஆதனங்கள் காணியின் கீழ் காட்டுவதற்காக நடவடிக்கை எடுப்பதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. | நாளதுவரையான தகவல்கள் மீது நிதிக் கூற்றுக்கள் தயாரிகக்கப்பட வேண்டும். |
| (ஊ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டிருந்த சொத்துக்கள் மீளாய்வுக் குழு அறிக்கையின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நினைவுப் பெறுமதி ரூபா 403.68 மில்லியனுக்கான செயற்பாட்டுக் கட்டிடம் மற்றும் நிர்மாணவேலைகள் மற்றும் ரூபா 181.9 மில்லியனுக்கான இயந்திரங்கள் மற்றும் உபகரணங்களை பௌதீக ரீதியாக இனங்காண்பதற்கு முடியாமையால் அந்த சொத்துக்களின் உளமை நிச்சயமற்ற தன்மையில் காணப்பட்டது என அவதானிக்கப்பட்டது. | இணங்கவில்லை.<br><br>மேலதிக முகாமைத்துவ பணிப்பாளரினால் நியமனம் செய்யப்பட்டுள்ள சொத்துக்களை நாளதுவரை ஆக்கும் குழுவினால் வழங்கப்பட்டிருந்த பரிந்துரையின் படி சொத்துக்கள் பதிவேட்டில் சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | நிதிக்கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டுள்ள சொத்துக்கள் பௌதீக ரீதியாக காணப்படவில்லை என இனங்கண்டிருந்தால் அது தொடர்பாக தேவையான சீராக்கல்கள் சொத்துக்கள் பதிவேட்டில் மேற்கொள்ளப்பட வேண்டும். |

### 1.5.4 இணக்கமொன்றின்றி கணக்குகளில் இருந்து அகற்றுதல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| ஹம்பாந்தோட்டை துறைமுகம் நிர்மாணிப்பதற்காக பெற்றிருந்த வெளிநாட்டுக் கடன்களில் 2017 நவம்பர் 30 திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் கணக்குகளில் மீதியாக காணப்பட்ட ரூபா 147,746 மில்லியன் தொகைக்கான கடன் மற்றும் வட்டி மீதி திறைசேரியின் இணக்கத்துடன் அல்லது அமைச்சரவை அங்கீகாரமின்றி அதிகார சபையினால் நிதிக்கூற்றுக்களில் இருந்து அகற்றப்பட்டிருந்ததுடன், அதன் காரணமாக அத் திகதியின் பின்னர் | இணங்குகின்றேன்.<br><br>கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு அதிகார சபையின் ஏடுகளில் பதியப்பட்டிருந்த கடன்தொகை ரூபா 147,746,246,364.57 ஆகக் காணப்பட்டதுடன், அதற்காக ரூபா 149,943,332,000.00 இற்கான தொகையொன்று திறைசேரிக்கு செலுத்தப்பட்டிருந்தது. | இருதரப்பினரிடையே இணக்கப்பாடொன்றின் மூலம் அதிகார சபையின் அல்லது திறைசேரியின் கணக்குகளில் கடன்தொகை உட்படுத்தப்பட வேண்டும் என. |

அரசாங்கத்தின் எக் கணக்கிலேனும் அந்த கடன் தொகை உட்படுத்தப்பட்டு இருக்கவில்லை. எவ்வாறாயினும் MPS/SEC/2017/32 இலக்க மற்றும் 2017 ஜூலை 20 திகதிய ''ஹம்பாந்தோட்டை துறைமுக சலுகை உடன்படிக்கை'' எனப்படும் அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு 2017 ஆகஸ்ட் 04 திகதி வழங்கியிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் படி மேற்கூறிய கடன் மற்றும் வட்டியை திருப்பிச் செலுத்தும் பொறுப்பு திறைசேரிக்கே காணப்பட்டது. அதன் படி திறைசேரியின் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் 2017 ஆண்டு முதல் கடன் தவணை மற்றும் வட்டி செலுத்தப்பட்டிருந்ததுடன், 2021 ஆண்டிற்கான பதிவேட்டின் படி, 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேலும், செலுத்தப்பட வேண்டிய கடன்மீதி ரூபா 165,483 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. மேலும் மேற்கூறிய கடன்தொகைக்குரிய 2017 நவம்பர் 30 வரையான காலத்திற்கு கணிக்கப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி மாற்ற திரண்ட நட்டம் ரூபா 31,545 மில்லியன் தொகையும் கடனை அகற்றிய போது அதிகார சபையின் கணக்குகளில் இருந்து அகற்றப்பட்டிருந்தது. 2017 நவம்பர் 30 திகதி முதல் 2020 திசெம்பர் 31 வரையான வெளிநாட்டு செலாவணி மாற்ற திரண்ட நட்டமாகிய ரூபா 34,072 மில்லியன் தொகையும் உட்பட 2020 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு, வெளிநாட்டுச் செலாவணி மாற்ற திரண்ட நட்டம் ரூபா 65,618 மில்லியன் தொகை மற்றும் 2021 ஆண்டின் வெளிநாட்டுச் செலாவணி மாற்ற நட்டமும் திறைசேரியின் அல்லது அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் உட்படுத்தப்பட்டிருக்கவில்லை. எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான கடன் மீதி தொடர்பாக கணக்கிடப்பட்ட வெளிநாட்டுச் செலாவணி இலாபம்/ நட்டம்

தொடர்பான தகவல்கள் வெளிநாட்டு மூலவள திணைக்களத்தினால் கணக்காய்விற்குச் சமர்ப்பித்திருக்கவில்லை.

நிதியமைச்சுச் செயலாளரினால் பல சந்தர்ப்பங்களில் அதிகார சபை தலைவருக்கு இந்த கடன் தொகையை அதிகார சபையின் ஏடுகளில் உட்படுத்திக் கொள்ளும் பல அறிவித்திருந்தது. எவ்வாறாயினும் மீளாய்வாண்டு இறுதியளவிலும் மேற்கூறிய கடன்மீதி மற்றும் உரிய வெளிநாட்டு செலாவணி மாற்ற இலாபம்/ நட்டத்தை கணக்கீடு செய்வதற்கு இலங்கை துறைமுக அதிகார சபை அல்லது திறைசேரி நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

### 1.5.5 திரட்டிய நிதிக்கூற்றுக்கள் தயாரித்தல்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | திரட்டிய நிதி நிலைமைக் கூற்றில் சொத்துக்கள் என காட்டப்பட்டுள்ள மாகம்புர துறைமுக முகாமைத்துவக் கம்பனியின் சொத்துக்களில் அடங்கியுள்ள ரூபா 12.43 மில்லியன் தொகைக்கான இருப்பு, நினைவுப் பெறுமதி ரூபா 0.26 மில்லியன் இற்கான நிலையான சொத்துக்கள் மற்றும் கையில் காசு ரூபா 0.17 மில்லியன் தொகை பௌதீக ரீதியாக காணப்படவில்லை. ரூபா 12.86 மில்லியன் தொகைக்கான இந்த நட்டத்திற்காக நிதிக்கூற்றுக்களில் ஏற்பாடுகளும மேற்கொண்டிருக்கவில்லை.<br>மேலும், நிதி நிலைமைக் கூற்றின் படி 2019 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அந்தக் கம்பனிக்கு அரசிலிருந்து கிடைக்கப் பெற வேண்டிய ரூபா 17.78 மில்லியன் தொகை கப்பல் எண்ணெய் காப்புறுதிக்காக பெற வேண்டிய ரூபா 28.04 மில்லியன் தொகை மற்றும் வியாபாரக் கடன்பட்டோரிடம் பெற வேண்டிய ரூபா 3.58 மில்லியன் தொகை மீதிக்காக மற்றும் | இணங்கவில்லை.<br><br>குறிப்பிட்ட சொத்துக்கள் பௌதீக ரீதியாக காணப்படாமை தொடர்பாக மற்றும் ஏனைய ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படாமை தொடர்பாக MPMC நிறுவனத்தை வினவ வேண்டும். | நிருவகிக்கப்படும் கம்பனியின் நூற்றுக்கு நூறு பங்குகளின் உரிமையை உடைய தாய் கம்பனியாக மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்களில் நிருவகிக்கப்படும் கம்பனிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் காட்டப்படுகின்றமையால் இது தொடர்பாக அதிகார சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | அத்திகதியில் உள்ளவாறு கம்பனியினால் செலுத்த வேண்டிய ஏனையவற்றுக்குரிய ரூபா 7.3 மில்லியனுக்கான மீதிக்காக மூலப் பதிவேடுகள், மீதியை உறுதிப்படுத்தும் கடிதங்கள், காலப்பகுப்பாய்வு அறிக்கை மற்றும் துணை ஆவணங்கள் கணக்காய்விற்கு சமர்ப்பித்திருக்கவில்லை. | | |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு நிர்வகிக்கும் கம்பனிகள் இரண்டினதும் நிதிக்கூற்றுக்களின் படி பெற வேண்டிய தடுத்து வைத்தல் வரி மீதி ரூபா 6.57 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், தடுத்து வைத்தல் வரியில் இருந்து ரூபா 3.66 மில்லியனுக்கு உரிய வரிச் சான்றிதழ் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்படவில்லை. வரிச் சான்றொன்று காணப்படாமையால் மேற்கூறிய தடுத்து வைத்தல் வரி மீதியை வருமான வரி செலுத்தும் போது கழித்தல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மையொன்று காணப்பட்டது. | இணங்கவில்லை.<br><br>இது தொடர்பான தகவல்கள் என்னிடம் காணப்படாமையால் குறிப்பிட்ட விபரங்கள் உரிய கம்பனிகள் (JCT Ltd., MPMC) இருந்து பெற்றுக் கொள்ளவேண்டும். | நிருவகிக்கும் கம்பனியின் நூற்றுக்கு நூறு பங்குகளின் உரிமையை உடைய தாய் கம்பனியாக மற்றும் திரட்டிய நிதிக் கூற்றுக்களில் நிருவகிக்கப்படும் கம்பனிகளின் சொத்துக்கள், பொறுப்புக்கள் காட்டப்படுகின்றமையால் இது தொடர்பாக அதிகார சபையின் கவனம் செலுத்தப்பட வேண்டும். |

### 1.5.6 தீர்க்கப்பட்டிருக்காத பெற வேண்டியவைகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | ஹம்பந்தோட்டை துறைமுகம் நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடன்தொகையில் அதிகார சபையினால் 2017 ஆண்டின் போது செலுத்தப்பட்டிருந்த தவணைப் பணம் ரூபா 4,406 மில்லியன் மற்றும் முத்திரைக் கட்டணம் ரூபா 372 மில்லியன் உட்பட ரூபா 4,778 மில்லியன் தொகை 2022 ஏப்ரல் 30 திகதி வரை அதிகார சபைக்கு கிடைத்திருக்கவில்லை. மேலும் இது தொடர்பாக மீதியை உறுதிப்படுத்தல் அதிகார சபையினால் அழைத்திருந்த போதிலும் திறைசேரியினால் அந்த உறுதிப்படுத்தல்களை உறுதிப்படுத்தியிருக்காததுடன், 2021 | இணங்கவில்லை. இந்தத் தொகை துறைமுக அதிகார சபைக்கு கிடைக்க வேண்டிய தொகையொன்று ஆகும். குறிப்பிட்ட தொகையை திருப்பிச் செலுத்துமாறு துறைமுக அதிகார சபைக்கு 4 சந்தர்ப்பங்களில் திறைசேரி செயலாளருக்கு கடிதங்கள் அனுப்பியிருந்ததுடன், 2019.02.12 திகதி நடைபெற்ற பணிப்பாளர் சபை கூட்டத்தில் பணிப்பாளர் சபை பத்திரமொன்று மூலம் இது தொடர்பாக அறிவித்திருந்தது. | திறைசேரியுடன் கலந்துரையாடி பெற வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆண்டிற்காக குடியரசின் நிதிக்கூற்றுக்களிலும் செலுத்த வேண்டிய மீதியில் இந்த மீதியை உட்படுத்தியிருக்கவில்லை எனவும் அவதானிக்கப்பட்டது. இதன் காரணமாக இந்தத் தொகை கிடைத்தல் தொடர்பாக நிச்சயமற்ற தன்மை ஒன்று காணப்பட்டது. | | |
| (ஆ) | ஹம்பந்தோட்டை துறைமுக அபிவிருத்தி செயற்திட்டத்தின் கீழ் எண்ணெய் தாங்கி நிர்மாணிக்கும் செயற்திட்டத்திற்காக திறைசேரியினால் இலங்கை வங்கியில் இருந்து பெற்றுக் கொண்டிருந்த டொலர் கடன் தொகைக்காக தவணைப் பணம் திறைசேரியினால் குறிப்பிட்ட நேரத்தில் செலுத்தப்படாமையால் அதிகார சபையினால் இலங்கை வங்கியில் பேணப்பட்டு வந்த அமெ.டொலர் கணக்கில் இருந்து 2018 ஆண்டின் போது 0.64 மில்லியன் அமெ.டொலர்கள் அதாவது ரூபா 377.84 மில்லியன் தொகை வங்கியினால் அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதிகார சபையின் நிதிக்கூற்றுக்களில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு மேற்கூறிய தொகை திறைசேரியில் இருந்து பெற வேண்டிய மீதியொன்றென காட்டப்பட்டிருந்த போதிலும் 2022 ஏப்ரல் 30 திகதி வரை பணம் கிடைத்திருக்காததுடன், இந்தப் பணம் கிடைத்தல் நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என அவதானிக்கப்பட்டது. | இணங்குகின்றேன்.<br><br>இதனை சரி செய்து குறிப்பிட்ட அறவிடப்பட்ட தொகையை திருப்பிச் செலுத்துமாறு விண்ணப்பித்து முன்னைய ஆண்டுகள் போலவே 2021 ஆண்டிலும் 2021.03.31, 2021.06.15 மற்றும் 2021.12.02 திகதிகளில் இலங்கை வங்கியின் பிரதான கிளைக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. அந்தத் தொகையை மீண்டும் பெற்றுக் கொள்வதற்காக இலங்கை துறைமுக அதிகார சபையினால் முடியுமான அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றது. | திறைசேரி மற்றும் குறிப்பிட்ட வங்கியுடன் கலந்துரையாடி பெற வேண்டிய தொகையை அறவீடு செய்வதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

### 1.6 பெற வேண்டிய மற்றும் செலுத்த வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெற வேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் கடன்கால வரையறையை மிகைத்திருந்த மொத்த கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதி ரூபா 1,667.57 மில்லியன் தொகை | 2021.12.31 திகதியில் உள்ளவாறு கணக்காய்வு அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள கடன்பட்டோர் மீதியுடன் இணங்குகின்றது.<br>**<u>கொழும்புத் துறைமுகம்</u>** | அங்கீகரிக்கப்பட்ட கடன் கால வரையறை உரிய கடன் மீதிகளை அறவீடு செய்வதற்கு தேவையான உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமை ஒன்றுகள் |

| | | | |
|---|---|---|---|
| | இருந்தது. அது மொத்த கப்பல் முகவர் கடன்பட்டோர் மீதியில் 55 சதவீதமாக இருந்தது. | 2021.12.31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட மொத்த கடன் கால வரையறை மிகைத்துள்ள மொத்த கப்பல் முகவர்கள் மீதி ரூபா 1,597,668,439 தொகையாக காணப்பட்டதுடன், அது 2022.05.23 திகதி அளவில் ரூபா 1,466,503,343.48 வரை குறைந்திருந்தது.<br>**<u>காலி துறைமுகம்</u>**<br>2021.12.31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கடன் கால எல்லையை மிகைத்திருந்த மொத்தக் கப்பல் முகவர் மீதி ரூபா 45.988,309.83 தொகையாக காணப்பட்டதுடன், அது 2022.05.23 திகதியளவில் ரூபா 45,143,833.15 வரை குறைந்திருந்தது. இந்தத் தொகை சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்ட வள்ளம் ஒன்று தொடர்பாக செலுத்த வேண்டிய மீதி ஒன்றாகும்.<br>**<u>திருகோணமலை துறைமுகம்</u>**<br>2021.12.31 திகதியில் உள்ளவாறு அங்கீகரிக்கப்பட்ட கடன் கால வரையறையை மிகைத்துள்ள மொத்த கப்பல் முகவர் மீதி ரூபா 23,920,622.92 தொகையாக காணப்பட்டதுடன், அது 2022.05.23 திகதியளவில் ரூபா 19,986,564.32 வரை குறைந்திருந்தது. | அறிமுகப்படுத்துவதற்காக முகாமைத்துவத்தினால் நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு பிணக்குகள் உடனான கடன்பட்டோர் (dispute debtors) ரூபா 59.78 மில்லியன் தொகை மற்றும் மீண்டும் தீர்த்தலுக்காக (re-dispute) அனுப்பப்பட கடன்பட்டோர் ரூபா 4.63 மில்லியன் காணப்பட்டது. | இணங்குகின்றேன்.<br>**<u>கொழும்பு துறைமுகம்</u>**<br>பிணக்கு பில்பத்திரங்கள் (dispute debtors)<br>2021.12.31 திகதியிலுள்ளவாறு பிணக்குகள் உடனான கடன்பட்டோர் (dispute debtors) மீதி ரூபா 58,625,900.04 தொகையாக காணப்பட்டதுடன், 2022.05.23 திகதி அளவில் அந்த மீதி ரூபா 8,554,348.45 வரை குறைந்திருந்தது.<br>மீண்டும் தீரத்தலில் பிணக்கு பில்பத்திரங்கள் (Re-Dispute Debtors) மீதி ரூபா 4,636,104.29 | காணப்படும் சிக்கல்களை தீர்த்துக்கொண்டு பெற வேண்டியவற்றை கூடிய விலையில் அறவீடு செய்ய நடவடிக்கை எடுக்க வேண்டும். |

| | | |
|---|---|---|
| | தொகையாக காணப்பட்டதுடன், அது 2022.05.23 திகதியளவில் ரூபா 1,226,992.90 வரை குறைவடைந்திருந்தது.<br><br>**<u>காலி துறைமுகம்</u>**<br>காலி துறைமுகத்துக்குரிய பிணக்குகள் உடனான கடன்பட்டோர் (dispute debtors) மீதி ரூபா 1,156,420 தொகையாக காணப்பட்டதுடன், அது (Shanika Marine Company (pvt) Ltd) நிறுவனத்திற்குரியதாகும். அதனை எதிர்காலத்தில் நீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது. | |

**1.6.2 முற்பணங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கப்பல் முகவர்களினால், துறைமுக சேவை வசதிகள் பெற்றுக்கொள்ளும் போது முன்னர் செலுத்தியிருந்த முற்பணத் தொகையில் உள்ளவாறான செலவை தீர்த்த பின்னர் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு திருப்பி செலுத்தாமல், கிடைத்த முற்பணங்கள் என நிதிக் கூற்றுக்களில் மீதியாக காணப்பட்ட மீதி ரூபா 631.97 மில்லியனாக காணப்பட்டதுடன், அவற்றில் கொழும்பு துறைமுகத்துக்குரிய ரூபா 619.39 மில்லியன் தொகையில் ரூபா 150.43 மில்லியன் தொகை சேவையை பெற்று 06 மாதங்கள் முதல் 5 வருடங்களை மிகைத்திருந்த போதிலும், தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.<br>மேலும், முகவர்களினால் துறைமுக சேவையை பெற்றுக்கொள்வதற்காக இன்வொயிஸ் பெறுமதியை விட கூடுதலாக செலுத்தப்பட்ட பணத் தொகைகள், கப்பல் முகவர் செலவு மீதி (Shipping agent credit balances) என நிதிக் கூற்றுக்களில் காட்டப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் | கொழும்பு துறைமுகத்துக்குரிய 2021.12.31 திகதியில் உள்ளவாறு கப்பல் முகவர் முற்பணக் கணக்கில் காணப்பட்ட மீதிகளுடன் இணங்குகின்றேன்.<br>2021.12.31 திகதியில் உள்ளவாறு 06 மாதங்களை மிகைத்துள்ள கப்பல் முகவர் முற்பணக் கணக்கில் காணப்பட்ட மீதியில் இருந்து 2022.05.23 திகதியில் உள்ளவாறு 06 மாதங்கள் முதல் 05 வருடங்களை மிகைத்துள்ள மீதி ரூபா 137.91 மில்லியன் தொகை வரை தீர்க்கப்பட்டுள்ளது.<br>தற்போது 06 மாதங்கள் முதல் 05 வருடங்களை மிகைத்துள்ள செலவு மீதி ரூபா 75.70 மில்லியன் வரை தீர்க்கப்பட்டுள்ளது.<br>கொழும்புத் துறைமுகத்துக்குரிய 2021.12.31 திகதியில் உள்ளவாறு 06 மாதங்கள் முதல் 05 வருடங்களை மிகைத்துள்ள | சேவையை பெற்றுக்கொள்வதற்காக அதிகார சபைக்கு செலுத்தப்பட்ட முற்பணத் தொகையில் குறிப்பிட்ட சேவையை வழங்கிய பின்னர் மீதியாக காணப்படும் முற்பணத் தொகை மற்றும் கொடுப்பனவு தொடர்பாக விரிவான அட்டவணை மற்றும் காலப் பகுப்பாய்வு தொடர்பாக கவனத்தில் எடுத்து காலம் கடந்த மற்றும் அசையாத மீதிகளை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | |
|---|---|
| 31 திகதியில் உள்ளவாறு அந்த மீதி ரூபா 508.68 மில்லியன் தொகையாக காணப்பட்டதுடன், அவற்றில் கொழும்பு துறைமுகத்துக்குரிய ரூபா 503.38 மில்லியன் தொகையில் ரூபா 111.55 மில்லியன் தொகைக்கான சேவையை பெற்றுக்கொண்டு 06 மாதங்கள் முதல் 5 வருடங்களை மிகைத்திருந்த காலப் பகுதியொன்று கடந்திருந்த போதிலும் தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | கப்பல் முகவர்கள் செலவு மீதி ரூபா 111.55 மில்லின் தொகையில் ரூபா 5.69 மில்லியன் தொகை MCC கப்பல் முகவர் செலவு மீதியாக காணப்படுவதுடன், அந்த மீதி காணப்படுவது எதிர்கால சேவை பெற்றுக்கொள்வதற்காகவே ஆகும்.<br>காணப்படும் ஏனைய அனே செலவு மீதிகளில் கப்பல் முகவர் நிறுவனங்களினால் வருடாந்தம் உறுதிப்படுத்தப்பட்ட மீதியொன்றாக காணப்படுவதுடன், அவர்களின் தேவைக்காக அந்தப் பணம் அடிக்கடி பில்பத்திரங்கள் தீர்ப்பதற்காக பயன்படுத்தப்படுகின்றது.<br>அதேபோல், அனேக கப்பல் முகவர் நிலையங்கள் துறைமுக அதிகார சபையினால் விதிக்கப்படுகின்ற மிகை விதிப்பு பில்பத்திரங்களில் இருந்து தவிர்ப்பதற்காக தமது கணக்குகளில் செலவு மீதியொன்று பேணிச் செல்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது.<br>எவ்வாறாயினும், வருடந்தம் அவர்களின் கணக்குகளில் காணப்படும் செலவு மீதிகள் பில்பத்திர கொடுப்பனவிற்காக பயன்படுத்தும் படி துறைமுக அதிகார சபையினால் எழுத்துமூலம் அறிவிக்கப்படுகின்றது. |

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்களுடன் இணங்காமை

| சட்டங்கள் விதிகள், பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமைகள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 11 | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதிகார சபையினால் நிலையான மற்றும் குறுகிய கால வைப்புக்களில் முதலீடு செய்யப்பட்ட ரூபா | இணங்கவில்லை. 2021 ஆண்டில் மேற்கொள்ளப்பட்ட வைப்புத தொகைக்கான திறைசேரிச் செயலாளரின் | நிதி அதிகாரச் சட்டத்தின் பிரகாரம் வைப்புக்கள் முதலீட்டுக்காக உரிய அங்கீகாரம் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | 52,344 மில்லியன் தொகைக்காக அதிகார சபையினால் நிதி அமைச்சரின் இணக்கத்தை பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்திருந்த போதிலும், அதற்குரிய பதில் அளித்திருக்கவில்லை. | அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக துறைமுகங்கள் மற்றும் கப்பல்துறை அமைச்சுச் செயலாளரின் கையொப்பத்துடன் கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளது. | பெறுவதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| (ஆ) | 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச் சட்டத்தின் பிரிவு 10(5) மற்றும் 1979 இன் 51 இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபைச் சட்டத்தின் பிரிவு 30 | நிதி அதிகாரச் சட்டத்தின் படி அரச கூட்டுத்தாபனம் ஒன்றின் ஏதேனும் ஆண்டிற்கான மிகையொன்று காணப்படின், அதிகார சட்டத்தில் காட்டப்பட்டுள்ள கழிவுகள் மேற்கொண்ட பின்னர் மீதியை திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்க வேண்டும். அதேபோல் துறைமுகங்கள் தொடர்பான சட்டத்தின் படி அதிகார சபைக்கு உரித்தாக்கப்பட்ட சொத்துக்களின் பெறுமதி மற்றும் அதிகார சபைக்கு வழங்கப்பட்டிருந்த நிதிசார் பங்களிப்பு மீது ஆண்டிற்கு 8 சதவீதம் (குறைந்தது ரூபா 607 மில்லியன்) மிகைக்காத பங்கிலாபம் ஒன்று திரண்ட நிதியத்திற்கு செலுத்த வேண்டும். அவ்வாறாயினும், 2016 முதல் 2021 வரையான ஆண்டுகளின் போது அதிகார சபை பெற்றிருந்த கூட்டுத்தொகை ரூபா 69,686 மில்லியன் தொகைக்கான தேறிய இலாபத்தில் இருந்து திரண்ட நிதியத்திற்கு செலவு வைக்கப்பட்டிருந்தது ரூபா 600 மில்லியன் தொகை மாத்திரமே. மேலும், மேற்கூறிய இலாபத்தில் நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறையினருக்கு வழங்கியிருந்த தெற்காசிய நுழைவு முடிவுமுனை (SAGT) மற்றும் கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை (CICT) ஆகிய முடிவுமுனைகளில் செயற்பாட்டு அலுவல்களில் ஈடுபட்டிருக்கும் | இணங்கவில்லை. இலங்கை துறைமுக அதிகார சபைச் சட்டத்தின் படி, இலங்கை துறைமுக அதிகாரசபை நிறுவும் போது அரசினால் மேற்கொள்ளப்பட்ட மூலதனத்தில் (Wquity Capital) 8% உச்ச மட்டத்தின் கீழ் பங்கிலாபம் வழங்கப்பட வேண்டும் என குறிப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், அரச தொழில் முயற்சிகள் திணைக்களம், இலங்கை துறைமுகங்கள் அதிகார சபை பங்கிலாபம் வழங்குவதில் இருந்து விடுவிக்கப்பட்டிருந்தது என 2018.04.24 திகதிய கடிதத்தின் மூலம் விடுவிக்கப்பட்டிருந்தது. இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் தேசிய முக்கியத்துவமுடைய துறைமுகச் செயற்திட்டத்திற்காக பெற்றிருந்த கடன் தொகையை தீர்த்தல் இலங்கை துறைமுகங்கள் அதிகார சபையினால் மேற்கொள்ளப்படுகின்றமையால் குறிப்பிட்ட விடுவித்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளது. | மிகைகள் மற்றும் பங்கிலாபம் தொடர்பாக நிதி அதிகார சட்டத்தின் மற்றும் இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சட்டத்தின் ஏற்பாடுகளின் படி செயற்படுதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என. |

| | | | |
|---|---|---|---|
| | இரண்டு நிறுவனங்களில் இருந்து அதிகார சபையினால் 2016 முதல் 2021 வரை அறவீடு செய்திருந்த கூட்டுத்தொகை ரூபா 13,021 மில்லியன் தொகைக்கான குத்தகை மற்றும் அந்தக் காலத்திற்கான வேத்துரிமை என அறவீடு செய்யப்பட்டிருந்த கூட்டுத்தொகை ரூபா 19,582 மில்லியன் தொகையும் உட்பட்டிருந்தது. இந்த வருமானம் துறைமுகத்தின் நேர் செயற்பாட்டு வருமானம் ஒன்றல்ல என மேலும் அவதானிக்கப்பட்டது. | | |
| (இ) 1979 இன் 51 ஆம் இலக்க இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபைச் சட்டம் | | - | |
| i. பிரிவு 37(i) | அதிகார சபையினால் அறவிடப்படக் கூடிய கட்டணங்கள் நிதி விடித்திற்கு பொறுப்பான அமைச்சரை வினவி, அமைச்சரின் அங்கிகாரத்துடன், அதிகார சபையினால் விதிக்கப்பட வேண்டியிருந்தது. அவ்வாறு அங்கீகாரம் பெற்று 2019 ஆண்டு திருத்தப்பட்ட சுங்கவரி அட்டவணையில் (Tariff - 2019) 24 ஆவது விடயத்தின் படி கொள்களன்களுக்கான களஞ்சிய கட்டணத்திலிருந்து விடுவித்தலை காலம் 21 நாட்கள் என காட்டப்பட்டிருந்த போதிலும் கப்பல் முகவர் நிலையங்களுடன் ஏற்படுத்தியிருந்த முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளில் (Terminal service agreement) 45 நாட்களுக்கான சலுகைக் காலமொன்று வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு களஞ்சியக் கட்டணத்திற்காக மீளாய்வாண்டின் போது வழங்கியிருந்த தள்ளுபடி (Rebates on storage) ரூபா 2,286.44 மில்லியன் | இலங்கை துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபை 1979 இன் 51 ஆம் இலக்க துறைமுகங்கள் தொடர்பான அதிகார சபைச் சட்டத்தின் மூலம் 1979 இல் நிறுவப்பட்ட பின்னர் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அமைத்து ‘‘துறைமுகச் சேவைகள்’’ துறைமுக அதிகார சபையினால் மாத்திரம் வழங்கப்பட்டிருந்ததுடன், பின்னைய காலங்களில் அரசாங்கத்தினால் எடுக்கப்பட்ட கொள்கைசார் தீர்மானங்களுக்கு இணங்க துறைமுக சேவைகள் அரச – தனியார் கூட்டுப்பங்காளியின் கீழ் நிறுவப்பட்ட கம்பனியினால் வழங்கப்படுகின்றது. துறைமுக அதிகார சபை வாணிப குறிக்கோள்களை நோக்கமாக கொண்டு நிறுவப்பட்ட நிறுவனம் ஒன்றாதலால், ஏனைய தனியார் | இலங்கை துறைமுகங்கள் மீதான அதிகார சபையின் சட்டத்தின் படி அதிகார சபை நிறுவப்பட்டிருந்தமை யால் அதில் குறிப்பிடப்பட்டுள்ள ஏற்பாடுகளின் படி அதிகார சபை செயற்பட வேண்டும் என மற்றும் போட்டி அடிப்படையிலான செயற்பாடு அலுவல்களுக்காக தடை ஒன்றாக ஏற்படுத்திக் கொள்ளக் கூடாது என. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகையாக காணப்பட்டதுடன், சுங்கவரி அட்டவணையில் (Tariff – 2019) குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தகளை விட வித்தியாசமான நிபந்தனைகளுடன், முடிவுமுனை சேவை உடன்படிக்கைகள் கையொப்பமிடப்பட்டிருந்தது. அதற்காக நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரிடம் வினவி பெற்றிருந்த அங்கீகாரம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | முடிவுமுனைகளுடன், போட்டி அடிப்படையில் நடவடிக்கை எடுத்தல் அவசியமாகும். அதன்படி, பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்துடன், கப்பல் கம்பனிகளுடன் முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளுக்கு அணுகியிருந்தது. அதனால் முடிவுமுனை சேவை உடன்படிக்கைகளுக்கு நிதி விடயத்திற்கு பொறுப்பான அமைச்சரின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ளத் தேவையில்லை. | |
| ii. | பிரிவு 39(1) | அதிகார சபையின் ஏதேனும் இடைநிலை கொட்டகைகளில் வைக்கப்படும் பண்டங்களுக்குரிய காலம் பூர்த்தியடைந்த பின்னர் 40 ஆவது பிரிவின் ஏற்பாடுகளுக்கு இழப்பு ஏதும் ஏற்படாத வகையில் அதிகார சபையினால் பகிரங்க ஏல விற்பனையில் விற்பனை செய்ய முடியும், அதேபோல் அந்த விற்பனையின் மூலம் கிடைக்கும் பணத்தில் உரிய சுங்கக் கட்டணத்தை செலுத்தி, அதிகார சபை பண்டகசாலைக் கட்டணம் மற்றும் நிறுவாகச் செலவு என்பவற்றை கழித்து மீதி ஏதும் காணப்படின் அந்தத் தொகையை திறைசேரிக்கு அனுப்ப வேண்டும். அதிகார சபையின் 2021 திசெம்பர் 31 திகதி முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களை பரிசோதனை செய்த போது அவ்வாறு ஏல விற்பனையின் மூலம் கிடைத்த பணத்தில் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தீர்க்கப்படாத மீதி ரூபா 385.14 மில்லியன் தொகை என அவதானிக்கப்பட்டதுடன், அவற்றில் 2015 முதல் 2020 வரை கிடைத்திருந்த ஏல | தீர்க்கப்படாத மீதியுடன் இணங்குகின்றேன். அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ள 2021.12.31 திகதியில் உள்ளவாறு காணப்பட்ட தீர்க்கப்படாத மீதியுடன் இணங்குகிய போதிலும் அந்த மீதியுள் 2015 முதல் 2021 வரை மாத்திரம் காணப்பட்ட தீர்க்கப்படாத மீதியாகும். மேலும், தீர்க்கப்படாத கோப்புகளுக்குரிய துறைமுக அதிகார சபையின் பங்கு என ரூபா 63,305,383 இற்கான தொகை கணக்கீட்டு கோட்பாடுகளின் படி கடந்த ஆண்டின் வருமானத்திற்கு சீராக்கல்கள் மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | ஏல விற்பனையில் கிடைத்த பணம் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் தாமதம் இன்றி குறிப்பிட்ட தரப்பினருக்கு வழங்குதல் மேற்கொள்ளக் கூடியவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு செய்முறை ஒன்றினை தயாரித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும் என. |

| | | | |
|---|---|---|---|
| | விற்பனை வருமானங்களுக்கு உரிய தரப்பினருக்கு தீர்க்கப்படாத ரூபா 336.38 மில்லியனிற்கான மீதியொன்றும் காணப்பட்டது. அதேபோல், 2010 ஆண்டு முதல் 2014 ஆண்டு வரை தீர்க்கப்படாத கோப்புக்களுக்குரிய அதிகார சபையின் பங்கு என ரூபா 63.31 மில்லியன் தொகை முன்னைய ஆண்டுகளின் வருமானம் என இனங் கண்பதற்கு நடவடிக்கை எடுத்திருந்த போதிலும் அவற்றில் ரூபா 52.57 மில்லியனிற்கான ஏலவிற்பனை வருமானத்தில் இருந்து இலங்கை சுக்கத்திற்கு செலுத்த வேண்டியிருந்த சுங்கக் கட்டணம் மற்றும் திறைசேரிக்கு செலுத்த வேண்டிய பங்களிப்பை இனங்கண்டு கொடுப்பனவு செய்வதற்கு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | | |
| (ஈ) 2021 நவம்பர் 16 திகதிய பீஈடி/01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கை | | | |
| i. பந்தி 7(3) | அதிகார சபையின் ஒவ்வொரு பிரிவின் செயற்பாடுகளுக்குரிய முக்கிய செயலாற்றுகளை சுட்டிகளை (Key Performance Indicators) அறிமுகப்படுத்தி செயலாற்றுகை மதிப்பாய்வொன்று மேற்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதிகார சபை மீளாய்வாண்டின் போது அந்தத் தேவைப்பாட்டினை நிறைவேற்றியிருக்கவில்லை. | செயலாற்றுகை சுட்டிகள் தயாரிக்கப்பட்டிருக்காத பிரிவுகளுக்காகவும், செயலாற்றுகை சுட்டிகள் தயாரிக்கப்பட்டிருந்துடன், தற்போது அவை மீளாய்வு செய்யப்பட்டு வருகின்றது. | ஒவ்வொரு பிரிவுகளின் செயலாற்றுகைக்கு உரிய முக்கிய செயலாற்றுகை சுட்டிகளை இனங்கண்டு அவ்வப் பிரிவுகளின் செயலாற்றுகையை மதிப்பாய்வு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |
| ii. 3.2(i) பந்தி மற்றும் 2013 ஜனவரி 23 திகதிய DMS/F1/3/3-1 இலக்கம் கொண்ட முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள | நிறுவனத்தினால் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டு அரச தொழில் முயற்சித் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்ள வேண்டியிருந்த போதிலும் அதிகார சபையினால் வரைபு ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை | அரச தொழில் முயற்சிகள் திணைக்களத்தின் வழிகாட்டலின் படி தயாரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை 2022.03.31 திகதி பணிப்பாளர் சபையினால் அங்கீகரித்த பின்னர் முகாமைத்துவ சேவைத் | சுற்றறிக்கை ஏற்பாடுகளின் படி ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட்டு முறையான அங்கீகாரம் பெற்றுக் கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க |

| | | | | |
|---|---|---|---|---|
| | கடிதம் | தயாரிக்கப்பட்டிருந்த போதிலும், அதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றிருக்கவில்லை. | திணைக்களத்தின் அங்கீகாரம் பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. | வேண்டும் என. 2022 ஜூலை 22 திகதி நடைபெற்ற பொது தொழில் முயற்சிகள் தொடர்பான குழுக் கூட்ட சந்தர்ப்பத்தில் முன் மொழியப்பட்டவாறு போட்டி அடிப்படையிலான முடிவுமுனைகளில் ஊழியர் எண்ணிக்கை தொடர்பாக கவனம் செலுத்தி பதவியணி மற்றும் ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறை தயாரிக்கப்பட வேண்டும். |
| (உ) | 2019 பெப்ரவரி 12 திகதிய MPS/AD/06/83-2017 இலக்கம் கொண்ட துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அலுவல்கள் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சுச் செயலாளரினால் வழங்கப்பட்ட கடிதம் | துறைமுக அதிகார சபையின் ஆட்சேர்ப்பு மற்றும் பதவியுயர்வு நடவடிக்கை முறை அங்கீகரித்து கொள்ளும் வரை அதிகார சபையின் அனைத்து ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளக் கூடாது என அறிவித்திருந்த போதிலும் அதிகார சபையினால் 2021 ஆண்டில் மாத்திரம் முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரத்தை பெற்றுக்கொள்ளாமல் ஆரம்ப சேவை வகைக்குரிய 227 பதவிகளுக்காக பதவியுயர்வு வழங்கப்பட்டிருந்தது. | வெற்றிடங்களை நிரப்பாமல் அத்தியவசிய கடமைகளை நிறைவேற்றிக்கொள்ள முடியாமையின் காரணத்தினால் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி 2021 ஆண்டின் போது இந்த பதவியுயர்வு வழங்கல் மேற்கொள்ப்பட்டது. 2009/2010 பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டிருந்த ஆட்சேர்ப்பு நடவடிக்கை முறையின் படி வெற்றிடங்களை நிறப்புவதற்காக முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் DMS/1710-P-11(T) இலக்கம் கொண்ட 2021-06-21 திகதிய கடிதத்தின் மூலம் அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | முகாமைத்துவச் சேவைத் திணைக்களத்தின் அங்கீகாரமின்றி ஆட்சேர்ப்புகள் மற்றும் பதவியுயர்வுகள் மேற்கொள்ளப்படக் கூடாது என. |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஊ) | 2021 ஜனவரி 01 திகதிய இலங்கை துறைமுக அதிகார சபையின் உள்ளகச் சுற்றறிக்கைகள் இலக்கம் 02/2021 இன் பந்திகள் 01 மற்றும் 07(I,II) | அதிகாரசபையின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்படும் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் வதிவதற்காக வழங்கப்படும் கால வரையறை முதலாவது வீடு வழங்கப்பட்ட நாள் முதல் 5 வருடங்களுக்காக உச்ச அளவு வரையறுக்கப்பட்டிருந்ததுடன், அந்த கால வரையறை பூர்த்தியடைந்த பின்னர் மேலும் ஒரு வருடத்திற்கு வசிக்கும் உத்தியோகத்தரின் ஆரம்ப அடிப்படை சம்பளத்தின் 12.5 சதவீத தொகை அறவீடு செய்து வீட்டுக் குழுவின் அங்கீகாரத்துடன் தங்கியிருப்பதற்காக சந்தரப்பம் காணப்படுகின்றது. அவ்வாறாயினும் அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு உத்தியோகத்தர்களுக்கு வழங்கியிருந்த உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுப் பரிசோதனையின் படி 6 வருடங்கள் முதல் 28 வருடங்கள் வரை குறிப்பிட்ட உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களிலிருந்து வெளியேறாமல் தங்கியிருக்கும் உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை 413 என கண்டறியப்பட்டது. | 5 வருடங்களை மிகைத்து உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் வதியும் ஊழியர்கள் காணப்படுகின்றனர் என்பதற்கு இணங்குகின்றேன். 26/27 இலக்கம் மற்றும் 2017-09-20 திகதிய சுற்றிக்கை மூலம் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களில் வதியக்கூடிய உச்சமட்ட காலம் 5 வருடங்கள் என குறிப்பிடப்பட்டுள்ளது. இதற்கு முன்னைய சந்தர்ப்பங்களில் வெளியிடப்பட்ட வீடுகள் ஒதுக்கல் தொடர்பான சுற்றிக்கையிலும் இந்த பிரவு உட்படுத்தப்ட்டிருந்த போதிலும் அதனை செயற்படுத்த முடியாமல் இருந்தது. வீட்டுகள் தொடர்பான குழுவிலும் மேற்கூறிய விடயம் கலந்துரையாடப்பட்டிருந்தது டன், இந்தப் பிரிவை செயற்படுத்துவதன் மூலம் தொழிலாளர் அமைதி முறிவடைதல் நேரிடுவதற்கு சந்தர்ப்பங்கள் அதிகமாக காணப்படும் என மற்றும் தொழிலாளர் பிணக்குகள் ஏற்படக்கூடும் எனவும் தொழில் சங்கங்களினால் சுட்டிக் காட்டப்பட்டமையால் குறிப்பிட்ட நிபந்தனைகள் செயற்படுத்தப்படவில்லை. | அனைத்த ஊழியர்களுக்கும் நியாயமொன்று ஏற்படக்கூடிய வகையில் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்கள் தொடர்பாக முறையான மற்றும் நியாயமான செய்முறை ஒன்றினை இனங் கண்டு செயற்படுத்த வேண்டும் என மற்றும் உத்தியோகபூர்வ வாசஸ்தளங்களின் துறைமுக ஊழியர்களே தங்கியிருக்கின்றனர் என்பதை உறுதிப்படுத்தல் தேவைப்படுகின்றது என. |
| (எ) | 2021 ஒக்தோபர் 14 திகதிய முகொ/ முகி/கொ/41/2021 இலக்கம் கொண்ட இலங்கை துறைமுக அதிகார சபையின் உள்ளகச் சுற்றறிக்கையின் பிரிவு 2-12 | அனைத்து வட்டாரம் மற்றும் பிரிவுத் தலைவர்களினால் பெற்றுக்கொண்டிருந்த முற்பணத் தொகை குறிப்பிட்ட வருடம் முடிவடைய முன்னர் தீர்க்கப்பட வேண்டியிருந்த போதிலும் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இலங்கை துறைமுக அதிகார சபையின் பல்வேறு வட்டாரங்களினால் 106 சந்தர்பபங்களில் பெற்றிருந்த ரூபா 80.89 மில்லியன் | இணங்குகின்றேன். 2021 நிதிக் கூற்றுக்களில் குறிப்பு இலக்கம் 62 இன் படி 2022.02.15 திகதியில் உள்ளவாறு தீர்க்கப்பட்டிருக்காத முற்பணங்களின் பெறுமதி என காட்டப்பட்டிருந்த முற்பணங்களின் பெறுமதி எனக் காட்டப்பட்டிருந்தது ரூபா 25.332 மில்லியன் தொகையாகும். | குறிப்பிட்ட கருமம் முடிவடைந்தவுடன் முற்பணத் தொகையை தீர்த்தல் மேற்கொள்ளப்படும் என உறுதிப்படுத்தப்பட்டவாறு உள்ளகக் கட்டுப்பாட்டு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்பட வேண்டும் என. |

| | | | | |
|---|---|---|---|---|
| | | தொகைக்கான முற்பணம் மற்றும் கொள்வனவுக்காக வழங்குனர்களுக்கு செலுத்தியிருந்த ரூபா 22.27 மில்லியனிற்கான முற்பணங்கள் உரியவாறு தீர்த்திருக்கவில்லை. அவற்றில் ரூபா 2.15 மில்லியன் தொகை 6 – 12 மாதங்களுக்கு இடைப்பட்ட காலமும், ரூபா 50.18 மில்லியன் தொகை 1 – 2 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமும், ரூபா 2.97 மில்லியன் தொகை 2 – 5 வருடங்களுக்கு இடைப்பட்ட காலமும், ரூபா 1.5 மில்லியன் தொகை 5 வருடங்களை மிகைத்திருந்த போதிலும் தீர்க்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறு நீண்ட காலம் முற்பணங்கள் தீர்க்கப்படாமைக்கான காரணம் கணக்காய்விற்கு வெளிப்படுத்தப்படவில்லை. | எவ்வாறாயினும் 2022.03.01 திகதி அளவில் ரூபா 10.60 மில்லியன் வரை குறைந்திருந்ததுடன், தீர்க்கப்படாத முற்பணங்கள் தொடர்பாக பொழிப்பு அறிக்கையொன்று அனைத்து வட்டாரங்களுக்கும் காலாண்டு அடிப்படையில் அனுப்பி முற்பணங்களை தீர்ப்பதற்கு நடவடிக்கை எடுக்கும் படி அறிவுறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும். | |
| (ஏ) | 2021 நவம்பர் 16 திகதிய 01/2021 இலக்கம் கொண்ட அரச தொழில் முயற்சிகள் சுற்றறிக்கையுடன் வெளியிடப்பட்டுள்ள அரச தொழில் முயற்சிகளுக்கான நியதிச் சட்டரீதியான நல்லாளுகை வழிகாட்டலில் பந்தி 2.2.5 | நிருவகிக்கும் கம்பனிகளுக்காக தாய்க் கம்பனியின் பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டுள்ள நிருவகிக்கும் கம்பனிகளுக்காக கொள்கையொன்று (Board approved subsidiary policy) தயாரிக்கப்பட்டு அதன்படி, நடவடிக்கை எடுக்க வேண்டியிருந்த போதிலும் அதிகார சபைக்கு சொந்தமான நிருவகிக்கும் கம்பனிகளுக்காக தயாரிக்கப்பட்டிருந்த நிருவகிக்கும் கம்பனி கொள்கையொன்று இதுவரை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | எதிர்காலத்தில் நடைபெறக்கூடிய நிறைவேற்றுக் குழு கூட்டத்தில் இந்த விடயத்தை அறிவித்து உரிய நடவடிக்கை எடுப்பதற்கு செயற்படுத்தப்பட்டு வருகின்றது. | அதிகார சபைக்கு சொந்தமான நிருவகிக்கப்படும் கம்பனிகள் காணப்படுவதனால் நிருவகிக்கப்படும் கம்பனிகளுக்காக பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட நிருவகிக்கப்படும் கம்பனிகளுக்கான கொள்கையொன்று தயாரிக்கப்பட்டு அதன்படி, நிருவகிக்கப்படும் கம்பனிகள் தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |
| (ஐ) | உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் புதிய முற்பண தனிநபர் வருமான வரி அட்டவணை | மாதாந்த நிரந்தர வருமானம் ரூபா 250,000 இற்கு கூடிய அனைத்து உத்தியோகத்தர்கள் முற்பண தனிநபர் வருமானம் வரிக்கு ஆளாகுவதுடன் வரி | இணங்கவில்லை. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் மூலம் முற்பண தனிநபர் வருமான வரி தொடர்பான | உள்நாட்டு இறைவரிச் சட்டத்தின் பிரகாரம் பொருத்தமான அனைத்து |

| | | |
|---|---|---|
| செலுத்தும் போது ஊழியரின் விருப்பத்தின் படி சம்பளத்திலிருந்த கழிப்பதற்காக அல்லது நேரடியாக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்த முடியும். முற்பண தனிநபர் வருமானம் கணிப்பதற்காக உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் வெளியிட்டுள்ள வரி அட்டவணையின் படி ஊழியர்களுக்கு கிடைக்கக் கூடிய அனைத்து நிதி மற்றும் நிதி அல்லாத கொடுப்பனவுகளை கவனத்தில் எடுக்க வேண்டும். எவ்வாறாயினும், இலங்கை துறைமுக அதிகார சபையில் இருக்கும் உத்தியோகததரிடம் வரி கழிப்பதற்காக விருப்பம் தெரிவித்திருக்காத 33 உத்தியோகத்தர்களின் முற்பண தனிநபர் வருமான வரிக் கணிப்பு மேற்கொள்ளும் போது வீட்டுக்கான கொடுப்பனவு, போக்குவரத்து கொடுப்பனவு, ஏனைய நிதி அல்லாத கொடுப்பனவுகள் எதனையும் கவனத்தில் எடுத்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது. | வழிகாட்டலின் படி இலங்கை பிரஜைகளின் வேலை மூலமான வருமானத்தின் மீது மாதாந்த வரி கழித்தல் மேற்கொள்ளல் குறிப்பிட்ட ஊழியர்களின் விருப்பத்தின் மீது மாத்திரமே காணப்பட்டது. இந்த மாதாந்த வரி கழித்தல் முற்பணத் தனிநபர் வரி செலுத்தலாகும். அதன்படி, சம்பளம் தயாரிக்கும் முறைமை ஊடாக கொடுப்பனவு மேற்கொள்ளப்படுகின்ற வரி அறவீடு செய்யக்கூடிய வேலை மீதான அனைத்து இலாபங்களின் மீது குறிப்பிட்ட ஊழியரின் விருப்பம் தெரிவித்த நாள் முதல் வரி கழிப்பதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டது. | கொடுப்பனவுகளுக்கும் கவனம் செலுத்தி வரிக் கணிப்புக்காக நடவடிக்கை எடுக்க வேண்டும். |

## 1.8 தகவல் தொழில்நுட்ப (IT) பொது கட்டுப்பாட்டு முறைமை

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| உயர் பாதுகாப்பு வலையம் என பெயரிடப்பட்டுள்ள துறைமுக வளாகத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக 2017 மற்றும் 2018 ஆண்டுகளின் போது மூலதன பாதீட்டின் மூலம் அனைத்து படலைகள் மற்றும் காப்பு பண்டக சாலைகளுக்காக முறையே ரூபா 60 மில்லியன் தொகை மற்றும் ரூபா 150 மில்லியன் தொகை செலவிடப்பட்டு CCTV கெமரா முறைமை ஒன்று பொருத்துவதற்கு திட்டமிடப்பட்டிருந்தது. 2019 மற்றும் 2020 ஆண்டுகளின் போது அதற்காக ரூபா 150 மில்லியன் தொகை ரூபா 600 மில்லியன் தொகையாக வருடாந்த பாதீட்டில் | துறைமுக நுழைவுக் கடவையில் CCTV கமரா பொருத்துதலுக்கான இரண்டு சந்தர்ப்பங்களில் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டதுடன் அந்த அனைத்து சந்தர்ப்பங்களிலும் பல்வேறு காரணங்களினால் குறிப்பிட்ட கொள்வனவு அலுவல்கள் இரத்தானது. இறுதியாக 2020 ஆண்டின் போது ரூபா 600 மில்லியன் ஒதுக்கப்பட்டு CCTV கமரா கொள்வனவு செய்யும் பெறுகை அலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட | செயல் நடவடிக்கைத் திட்டத்தினூடாக செயற்படுத்துவதற்கு விதிக்கப்பட்டிருந்த அதிகார சபையின் பாதுகாப்புக்காக மிகவும் முக்கியத்துவமான கருமங்கள் திட்டமிடப்பட்டவாறே செயற்படுத்துதல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். |

ஒதுக்கப்பட்டிருந்ததுடன், 2021 மார்ச் 09 திகதிய PA/MD/46 அதிகார சபையின் முகாமைத்துவப் பணிப்பாளரின் கடிதத்தின் மூலமும் CCTV கெமரா முறையை பொருத்தப்படும் என அறிவிக்கப்பட்டிருந்தது. அதே போல் இக் கருமத்திற்காக 2002 ஜனவரி 30 திகதி மற்றும் PFD/DFD/103/CM/03 இலக்கங் கொண்ட நிதி மற்றும் பொருளாதார அபிவிருத்தி அமைச்சரினால் சமர்ப்பிக்கப்பட்டிருந்த அமைச்சரவை விஞ்ஞாபனத்தின் படி அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் பெறுகைக் குழு ஒன்று (CAPC) மற்றும் தொழிநுட்ப மதிப்பாய்வுக்குழு ஒன்று (TEC) நியமனம் செய்வதற்கு 2020 பெப்ரவரி 13 திகதிய அமப/20/0174/222/003 இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம், அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறாயினும், அந்த அங்கீகாரத்தை இரத்துச் செய்யாமல் CCTV கெமரா முறைமையை பொருத்துவதற்காக 2021 ஆண்டின் போது ஒதுக்கப்பட்டிருந்த பாதீட்டு ஏற்பாடுகள் முகாமைத்துவ சபையின் தீர்மானம் ஒன்றின் படி திட்டமிடல் மற்றும் அபிவிருத்தி பிரிவின் உசாத்துணை அலுவல்களுக்காக மாற்றப்பட்டிருந்தது. அதன் படி உயர் பாதுகாப்பு வலயம் ஒன்றான துறைமுறை அதிகார சபையின் CCTV கெமரா பொருத்தும் கருமங்கள் நிறைவேற்றப்பட்டு இருக்காததுடன், இதன் காரணமாக பாதுகாப்பு தொடர்பான சிக்கலின் போது தேவையான தகவல்கள் பெற்றுக்கொள்ள முடியாத ஆபத்து நிலையினை தவிர்க்க முடியாது எனவும், செயற்பாட்டு அலுவல்களின் வெளிப்படைத் தன்மை மற்றும் வினைத் திறன் தொடர்பான தகவல்களை பரிசோதனை செய்யமுடியாது எனவும் அவதானிககப்பட்டது.

போதிலும் 2021 ஆண்டின் முதலாவது காலாண்டின் போது இந்த செயற்திட்டத்தின் நிதியம் வேறொரு அபிவிருத்தி செயற்திட்டத்திற்காக பயன்படுத்தப்பட்டதெனவும், குறிப்பிட்ட CCTV கமரா செயற்திட்டம் இரத்ததுச் செய்யப்பட்டது.

எனினும், CCTV கமரா பொறுத்துவதற்காக காணப்படும் தேவைப்பாட்டின் மீது துறைமுகத்தின் பிரதான நுழைவாயில் அடங்கக்கூடிய விதமாக கட்டம் கட்டமாக கமரா பொருத்துவதற்காக முகாமைத்துவத்தினால் தீர்மானிக்கப்பட்டிருந்ததுடன், தற்போது 08 பிரதான நுழைவாயில்களில் 02 இனை உள்ளடக்கக்கூடியதாக CCTV கமரா பொருத்தப்பட்டு பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. மீதியான 06 நுழைவாயில்களிலும் எதிர்காலத்தில் முறைப்பிரகாரம் கமரா முறைமை பொருத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்டிருந்த ஒன்றித்த நிதிக் கூற்றுக்களின் படி மீளாய்வாண்டின் திசெம்பர் 31 திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான தொகுதியின் இலாபம் ரூபா 19,843 மில்லியன் தொகை மற்றும் அதிகார சபையின் இலாபம் ரூபா 20,695 மில்லியன் தொகைகும் முன்னைய ஆண்டின்

தொகுதியின் மற்றும் அதிகாரசபையின் இலாபம் முறையே ரூபா 18,030 மில்லியன் தொகை மற்றும் ரூபா 18,738 மில்லியன் தொகையாக காணப்பட்டமையால் முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது தொகுதியின் மற்றும் அதிகார சபையின் நிதி விளைவுகள் முறையே ரூபா 1,813 மில்லியன் தொகையினாலும் மற்றும் ரூபா 1,957 மில்லியன் தொகையினாலும் அதிகரித்திருந்தது. அதிகார சபையின் முன்னைய ஆண்டின் வருமானம் ரூபா 38,931 மில்லியனிற்கான வருமானம் கொள்கலன்கள் செயற்பாடு அதிகரித்தல், ஐக்கிய அமெரிக்கா டொலர்களுக்கு ஒப்பாக இலங்கையின் ரூபா பெறுமதி குறைதல் காரணமாக மீளாய்வாண்டின் வருமானம் ரூபா 45,455 மில்லியன் தொகை வரை அதிகரித்தல் மற்றும் முன்னைய ஆண்டிற்கு ஒப்பாக வட்டி வருமானம் அதிகரித்தல் மேற்காட்டப்பட்டுள்ள நிதி விளைவுகளின் அதிகரிப்பிற்கு மீது பிரதானமாக தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தது.

**2.2 பிரதான வருமான மற்றும் செலவு விடயங்களின் போக்குப் பகுப்பாய்வு**

| | 2021 (ரூபா மில்லியன்) | 2020 (ரூபா மில்லியன்) | வித்தியாசம் | வித்தியாசத்தின் சதவீதம் % |
|---|---|---|---|---|
| வருமானம் | 45,455 | 38,931 | 6,524 | 16.75 |
| நேர் செலவுகள் | (23,861) | (21,946) | (1,915) | (8.72) |
| மொத்த இலாபம் | 21,594 | 16,985 | 4,609 | 27.14 |
| ஏனைய செயற்பாட்டு வருமானங்கள் | 12,310 | 11,314 | 996 | 8.8 |
| நிருவாகச் செலவு | (9,039) | (7,770) | (1,269) | (16.33) |
| செயற்பாட்டு இலாபம் | 24,865 | 20,529 | 4,336 | 21.12 |
| தேறிய நிதிச் செலவு | 2,005 | 849 | 1,156 | 136.16 |
| வெளிநாட்டு செலாவணி இலாபம் /(நட்டம்) | (1,269) | (1,052) | (217) | (20.63) |
| வரிக்கு முன்னர் தேறிய இலாபம் | 25,601 | 20,328 | 5,724 | 25.95 |
| திரண்ட நிதியத்திற்கு செலவு வைத்தல் | - | - | - | - |
| வருமான வரி | (2,676) | (2,603) | (73) | (2.8) |
| பிற்போடப்பட்ட வரி | (2,229) | 1,014 | (3,243) | (319.82) |
| வரிக்கு பின்னரான தேறிய இலாபம் | 20,695 | 18,738 | 1,957 | 10.44 |
| | ===== | ===== | ===== | ===== |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

i. கடந்த ஆண்டுக்கு ஒப்பாக வருமானம் ரூபா 6,523 மில்லியன் தொகை எனப்படும் 16.75 சதவீதத்தினால் அதிகரித்திருந்ததுடன் ஏனைய செயற்பாட்டு வருமானம் ரூபா 996 மில்லியன் தொகை எனப்படும் 8.8 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

ii. 2020 ஆண்டிற்கு ஒப்பாக மீளாய்வாண்டின் நேர்ச் செலவுகள் மற்றும் நிருவாகச் செலவுகள் முறையே 8.72 சதவீதத்தினாலும் மற்றும் 16.32 சதவீதத்தினாலும் அதிகரித்திருந்தது.

## 2.3 விகிதாசார பகுப்பாய்வு

| | | 2021 | 2020 |
|---|---|---|---|
| i. | பிரதான செயற்பாட்டு வருமானத்திற்கு செயற்பாட்டு தேறிய இலாப வீதாசாரம் | 27.62% | 23.67% |
| ii. | நடைமுறை விகிதாசாரம் | 3.89:1 | 3.22:1 |
| iii. | விரைவு விகிதாசாரம் | 3.77:1 | 3.11:1 |
| iv. | தேறிய இலாப வீதாசாரம் | 34.62% | 36.67% |
| v. | மொத்த இலாப வீதாசாரம் | 36.12% | 33.24% |
| vi. | ஒரு ஊழியருக்கான பதவியணி கிரயம் | 2,537,593 | 2,186,384 |
| vii. | உரிமை மூலதனத்திற்கு நீண்ட காலக் கடன் விகிதாசாரம் | 6.14:1 | 5.39:1 |
| viii. | ஊழியர் பதவியணிக் கிரயம் மொத்தக் கிரயத்தின் சதவீதமாக | 67.68% | 64.96% |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

- பிரதான செயற்பாட்டு வருமானத்திற்கு ஒப்பாக 2020 ஆண்டின் 23.67 சதவீதத்திற்கான செயற்பாட்டு இலாபம் 2021 ஆண்டில் 27.62 சதவீதம் வரை அதிகரித்திருந்ததுடன், 2020 ஆண்டின் 36.67 சதவீதத்தில் காணப்பட்ட தேறிய இலாப விகிதாசாரம் 2021 ஆண்டின் போது 34.62 சதவீதம் வரை குறைந்திருந்தது.
- 2020 ஆண்டில் நடைமுறை விகிதாசாரம் மற்றும் விரைவுச் சொத்து விகிதாசாரம் முறையே 3.22:1 மற்றும் 3.11:1 தொகையாக காணப்பட்டதுடன், மீளாய்வாண்டு இறுதியளவில் அது முறையே 3.89:1 தொகை மற்றும் 3.77:1 தொகை வரை முறையாக அதிகரித்திருந்தது.
- அதிகார சபையின் பதவியணிக் கிரயம் மொத்தக் கிரயத்தின் சதவீதமாக கணிக்கும் போது 2020 ஆண்டின் போது 64.96 சதவீதமாக காணப்பட்டதுடன், அது மீளாய்வாண்டு இறுதி அளவில் 67.68 சதவீதம் வரை அதிகரித்திருந்தது. உரிமை மூலதனத்திற்கு நீண்ட காலக் கடன் வீதாசாரம் 2020 ஆண்டில் 5.39:1 தொகை என காணப்பட்டதுடன், அது மீளாய்வாண்டின் போது 6.14:1 என அதிகரித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### (அ) கொழும்புத் துறைமுகத்தில் துறைமுக அதிகார சபை மற்றும் ஏனைய முடிவுமுனைகளின் கொள்கலன் செயற்பாட்டு அலுவல்கள்

2021 ஆண்டு இறுதியளவில் கொழும்புத் துறைமுகத்தில் கொள்கலன்கள் செலுத்துதல் உட்பட செயற்பாட்டலுவல்கள் மேற்கொள்ளப்படும் 05 முடிவுமுனைகள் காணப்பட்டதுடன், அவற்றில் ஜயாகொள்கலன் முடிவுமுனை, சமகி கொள்கலன் முடிவுமுனை, கிழக்கு கொல்கலன் முடிவுமுனை என்பன முழுமையாக துறைமுக அதிகார சபைக்கு சொந்தமானவையாகும். ஏனைய இரண்டு முடிவுமுனைகள் கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை(C.I.C.T.) மற்றும் தெற்காசிய நுழைவு முடிவுமுனை (S.A.G.T.) தனியார் நிறுவனங்கள் இரண்டினால் 85 சதவீத உரிமையின் மீது 35 வருடங்களுக்கான நிர்மாணித்தல், செயற்படுத்துதல் மற்றும் சாட்டுதல் (Built, Operations & Transfer) ஆகிய அடிப்படையின் கீழ் குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

2017 ஆண்டு முதல் மீளாய்வாண்டு வரை கொழும்புத் துறைமுகத்தில் அனைத்து முடிவுமுனைகளினதும் உள்நாட்டு மற்றும் மீள் ஏற்றுமதியாக கொள்கலன் செயற்பாட்டலுவல்கள் மேற்கொள்ளப்பட்ட முறை தொடர்பான விபரங்கள் கீழ்வருமாறாகும்.

| | 2021 அலகுகள் | % | 2020 அலகுகள் | % | 2019 அலகுகள் | % | 2018 அலகுகள் | % | 2017 அலகுகள் | % |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| S.L.P.A | | | | | | | | | | |
| தேசிய | 321,121 | | 231,053 | | 274,734 | | 328,813 | | 388,282 | |
| மீள் ஏற்றுமதி | 1,846,264 | | 1,855,713 | | 1,999,598 | | 1,965,987 | | 1,609,114 | |
| ஏனைய | 30,949 | | 11,038 | | 8,286 | | 9,734 | | 13,306 | |
| மொத்தம் | 2,198,334 | 30 | 2,097,804 | 31 | 2,282,618 | 32 | 2,304,534 | 33 | 2,010,702 | 32 |
| S.A.G.T. | | | | | | | | | | |
| தேசிய | 265,285 | | 265,189 | | 401,181 | | 379,939 | | 375,944 | |
| மீள் ஏற்றுமதி | 1,521,373 | | 1,568,769 | | 1,593,234 | | 1,644,336 | | 1,406,265 | |
| ஏனைய | 52,035 | | 38,094 | | 57,738 | | 42,483 | | 27,626 | |
| மொத்தம் | 1,838,693 | 25 | 1,872,052 | 27 | 2,052,153 | 28 | 2,066,758 | 29 | 1,809,835 | 29 |
| C.I.C.T | | | | | | | | | | |
| தேசிய | 612,649 | | 593,427 | | 597,417 | | 634,497 | | 619,325 | |
| மீள் ஏற்றுமதி | 2,482,410 | | 2,188,979 | | 2,209,228 | | 1,992,035 | | 1,726,203 | |
| ஏனைய | 117,272 | | 102,500 | | 86,921 | | 49,662 | | 43,003 | |
| மொத்தம் | 3,212,331 | 45 | 2,884,906 | 42 | 2,893,566 | 42 | 2,676,194 | 38 | 2,388,531 | 39 |
| மொத்தக் கூட்டுத்தொகை | 7,249,358 | 100 | 6,854,762 | 100 | 7,228,337 | 100 | 7,047,486 | 100 | 6,209,068 | 100 |

இது தொடர்பாக பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டன.

(i) முன்னைய ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது மீளாய்வாண்டின் போது கொழும்புத் துறைமுகத்தின் மொத்த கொள்கலன்களின் செயற்பாடுகளில் மற்றும் மீள் ஏற்றுமதிகளின் அதிகரிப்பொன்று (முன்னேற்றம்) காணப்பட்டது. அதேபோல் மீளாய்வாண்டு இறுதியளவில் துறைமுக அதிகார சபையின் கொள்கலன் செயற்பாட்டு எண்ணிக்கை முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும் போது 2,097,804 அலகுகளில் இருந்து 2,198,334 அலகுகள் வரை அதாவது 4.7 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

(ii) மீளாய்வாண்டின் ஒட்டுமொத்த கொள்கலன்களை நடாத்துகையில் அதிகார சபைக்கு 30 சதவீதமும் தெற்காசிய நுழைவு முடிவுமுனை (S.A.G.T.) 25 சதவீதமும், கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை கம்பனி (C.I.C.T.) 45 சதவீதமுமாக சந்தைப் பங்களிப்பை உரித்தாக்கியிருந்தது. கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனைக் கம்பனி (C.I.C.T.) கூடிய பங்களிப்பொன்றை உரித்தாக்கியிருந்தது.

(iii) அதிகார சபையின் கொள்கலன் செயற்பாட்டலுவல்கள் தொடர்பான முடிவுமுனை பயன்பாட்டு வீதாசாரம் (Terminal occupancy ratio) கவனத்தில் எடுத்த போது 2017 ஆண்டு முதல் 2021

ஆண்டு வரை அது முறையே 60,64,70,72 மற்றும் 70 சதவீதங்களை கொண்டிருந்தது. அதன்படி, அதிகார சபையின் முடிவுமுனை பயன்பாட்டுச் சதவீதம் 2017 ஆண்டு முதல் படிப்படியாக அதிகரிக்க ஆரம்பித்து மீளாய்வாண்டின் போது மீண்டும் குறைவடைந்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

(ஆ) அனைத்து துறைமுகங்களுக்கும் வருகை தருகின்ற கப்பல்கள் தொடர்பான விபரங்கள்

| ஆண்டு | 2021 | 2020 | 2019 | 2018 | 2017 |
|---|---|---|---|---|---|
| கொழும்பு | 3,675 | 3,806 | 4,198 | 4,331 | 4,329 |
| திருகோணமலை | 117 | 135 | 142 | 189 | 233 |
| காலி | 14 | 22 | 43 | 84 | 87 |
| காங்கேசன்துறை | - | - | 11 | 59 | 63 |
| ஹம்பாந்தோட்டை | 374 | 374 | 314 | 270 | 230 |
| மொத்தம் | 4,180 | 4,337 | 4,708 | 4,933 | 4,942 |

கப்பல்களின் உள்வருகை தொடர்பாக கவனம் செலுத்திய போது 2017 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரை கொழும்பு, காலி, திருகோணமலை ஆகிய துறைமுகங்களுக்கு வந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கையில் குறைவொன்று காணப்பட்டது. மத்திய மற்றும் சிறிய எண்ணிக்கையான கப்பல்களுக்கு பதிலாக பாரிய அளவிலான கப்பல்கள் வருகை தரல் இதற்கான காரணமாக இருந்தது. மேலும், 2020 ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டினை கவனம் செலுத்திய போது காங்கேசன்துறை துறைமுகத்திற்கு கப்பல் ஒன்றேனும் வருகை தந்திருக்கவில்லை என அவதானிக்கப்பட்டது.

**(இ) கொழும்பு துறைமுகத்திற்கு வருகை தந்துள்ள கொள்கலன் தாங்கிய கப்பல்கள் தொடர்பான விபரங்கள்**

| ஆண்டு / நிறுவனம் | 2021 கப்பல்களின் எண்ணிக்கை | 2020 கப்பல்களின் எண்ணிக்கை | 2019 கப்பல்களின் எண்ணிக்கை | 2018 கப்பல்களின் எண்ணிக்கை | 2017 கப்பல்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| துறைமுகம் அதிகாரசபை | 1,286 | 1,252 | 1,355 | 1,342 | 1,352 |
| எஸ்.ஏ.ஜீ.டீ | 867 | 926 | 1,016 | 1,152 | 1,073 |
| சீ.ஐ.சீ.டீ. | 1,027 | 1,103 | 1,233 | 1,245 | 1,258 |
| மொத்தம் | 3,180 | 3,281 | 3,604 | 3,739 | 3,683 |

2019 ஆண்டுடன் ஒப்பிடும் போது 2020 ஆண்டில் கொழும்புத் துறைமுகத்திற்கு கொள்கலன் தாங்கிய கப்பல்களின் வருகை 9 சதவீத்தினால் வீழ்ச்சியடைந்திருந்ததுடன், 2020 ஆண்டுடன் ஒப்பீடு செய்யும் போது 2021 ஆண்டில் அது 3 சதவீதத்தினால் குறைவடைந்திருந்தது. அதேபோல் அதிகார சபைக்கு வந்துள்ள கொள்கலன் செயற்பாட்டு கப்பல்களின் எண்ணிக்கை மீளாய்வாண்டின் போது 2.7 சதவீதத்தில் அதிகரித்திருந்தது. அதேபோல், CICT இற்கு வந்திருந்த கப்பல்களின் எண்ணிக்கை 6.8 சதவீத்தினாலும் SAGT இற்கு வந்துள்ள கப்பல்களின் எண்ணிக்கை 6.4 வீதத்தினாலும் குறைவடைதலொன்று காணப்பட்டது. ஒட்டுமொத்தமாக கொழும்புத் துறைமுகத்தில் காணப்பட்ட கொள்கலன் தாங்கிய கப்பல்கள் எண்ணிக்கை குறைவடைந்தல் அவதானிக்கப்பட்டதுடன், அதற்கான காரணம் பாரிய அளவிலான கப்பல்கள் வந்திருந்தல் என அவதானிக்கப்பட்டது.

1. **<u>சந்தையின் பங்கு</u>**

2021 ஆண்டிற்காக உலக துறைமுகங்கள் செயற்பாடுகள் தொடர்பாக வெளியிடப்பட்டிருந்த அல்பா லயினர் அறிக்கையின் படி (Alpha liner Report) இன் படி கொழும்புத் துறைமுகம் இருபது சம அலகுள் (Twenty Equivalent unit) 7,249,358 இற்கான செயற்பாடுகள் மேற்கொண்டு உலகத்தில் 22 ஆவது இடத்தில் தங்கியிருந்ததுடன், 2020 ஆண்டிற்கு ஒப்பாக 5.8 சதவீத அதிகரிப்பொன்றினை நெருங்கியிருந்தது. மேலும், துறைமுக அதிகார சபை 2020 ஆண்டிற்கு ஒப்பாக 2021 ஆண்டில் கொள்கலன்கள் நடாத்துவதில் 5 சதவீதத்தினால் அதிகரித்திருந்தது.

கொழும்புத் துறைமுகத்தில் துறைமுக அதிகார சபையின் கொள்கலன்கள் செயற்படுத்துவதில் சந்தைப் பங்கு 2001 ஆண்டு முதல் 2021 ஆண்டு வரையான காலப் பகுதியில் 81 சதவீத்தில் இருந்து 30 சதவீதம் வரை வீழ்ச்சியடைந்திருந்தது. எவ்வாறாயினும், கொழும்புத் துறைமுகத்தில் போட்டி அடிப்படையில் செயற்படுத்துகினற தனியார் கம்பனி ஒன்றான SAGT நிறுவனம் அந்தக் காலப் பகுதியில் 19 சதவீதமில் இருந்து 51 சதவீதம் வரை படிப்படியாக அதிகரித்து பின்னர் 25 சதவீதம் வரை படிப்படையாக குறைவடைந்திருந்தது. CICT நிறுவனம் 01 சதவீதத்தில் இருந்து 44 சதவீதம் வரையான தீவிர முன்னேற்றம் ஒன்றை நெருங்கியிருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| **ஆண்டு** | **S.L.P.A. கொள்கலன் அலகு** | **வீதம்** | **S.A.G.T. கொள்கலன் அலகு** | **வீதம்** | **C.I.C.T. கொள்கலன் அலகு** | **வீதம்** | **மொத்த கொள்கலன் அலகு** |
|---|---|---|---|---|---|---|---|
| 2001 | 1,396,946 | 81 | 229,670 | 19 | | | 1,726,616 |
| 2002 | 1,206,694 | 68 | 558,025 | 32 | | | 1,764,717 |
| 2003 | 1,334,900 | 68 | 624,439 | 32 | | | 1,959,339 |
| 2004 | 1,320,845 | 59 | 899,720 | 41 | | | 2,220,565 |
| 2005 | 1,523,794 | 62 | 931,526 | 38 | | | 2,455,300 |
| 2006 | 1,743,669 | 57 | 1,335,411 | 43 | | | 3,079,078 |
| 2007 | 1,834,734 | 54 | 1,546,497 | 46 | | | 3,381,231 |
| 2008 | 1,747,670 | 53 | 1,739,668 | 47 | | | 3,687,338 |
| 2009 | 1,714,488 | 49 | 1,749,809 | 51 | | | 3,464,297 |
| 2010 | 2,167,173 | 52 | 1,970,268 | 48 | | | 4,137,441 |
| 2011 | 2,299,446 | 54 | 1,963,441 | 46 | | | 4,262,887 |
| 2012 | 2,316,849 | 55 | 1,870,271 | 45 | | | 4,187,120 |
| 2013 | 2,501,863 | 58 | 1,746,802 | 41 | 57,541 | 1 | 4,306,206 |
| 2014 | 2,559,339 | 52 | 1,661,940 | 34 | 686,636 | 14 | 4,907,915 |
| 2015 | 2,252,323 | 44 | 1,371,245 | 26 | 1,561,899 | 30 | 5,185,467 |
| 2016 | 2,100,117 | 37 | 1,632,207 | 28 | 2,002,599 | 35 | 5,734,923 |
| 2017 | 2,010,702 | 32 | 1,809,835 | 29 | 2,388,531 | 39 | 6,209,068 |
| 2018 | 2,304,534 | 33 | 2,066,758 | 29 | 2,676,194 | 38 | 7,047,486 |
| 2019 | 2,282,618 | 32 | 2,052,153 | 28 | 2,893,566 | 40 | 7,228,337 |
| 2020 | 2,097,804 | 31 | 1,872,052 | 27 | 2,884,906 | 42 | 6,854,762 |
| 2021 | 2,198,334 | 30 | 1,838,693 | 25 | 3,212,331 | 44 | 7,249,358 |

அதன்படி, துறைமுகத்தில் பிரதான கருமங்களான கொள்கலன் செயற்பாட்டுக் கருமங்கள் துறைமுக அதிகார சபையிலிருந்து படிப்படியாக நழுவி அது தனியார் துறையின் பக்கம் சாய்ந்திருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 3.1 முகாமைத்துவ திறமையின்மை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 24 பிரிவுகளின் மூலம் சமர்ப்பிக்கப்பட்டிருந்த பதவியணி விபரங்களின் படி 77 பதவிகளுக்குரிய அங்கீகரிக்கப்பட்ட பதவியணியை மிகைத்து 513 ஊழியர்கள் சேவையில் ஈடுபடுத்தப்பட்டிருந்த போதிலும், அதிகார சபையின் செயற்பாட்டமுவல்களுக்காக (Operations) நேரடியாக தொடர்புபட்டுள்ள துறைகளில் 633 ஊழியர் வெற்றிடங்கள் காணப்படுவதாக அவதானிக்கப்பட்டது. அதேபோல், அதிகார சபையின் செயற்பாட்டலுவல்களுக்காக நேரடித் தொடர்பொன்று காணப்படாத 12 துறைகளின் 427 ஊழியர்களுக்கான மிகையொன்று காணப்பட்டது. 2021 ஆண்டின் போது ஊழியர் மிகைகள் காணப்பட்ட பிரிவுகளின் ஊழியர்களுக்காக செலுத்தப்பட்டிருந்த ரூபா 1,173 மில்லியனிற்கான மேலதிக நேர கொடுப்பனவு உட்பட ஆண்டிற்கான ஒட்டுமொத்த மேலதிக நேர கொடுப்பனவு ரூபா 5,850 மில்லியன் தொகை செலுத்தப்பட்டிருந்தது. மேலும், தாபனக் கோவையின் அத்தியாயம் viii பிரிவு 2(I) இன் படி மேலதிக நேர கொடுப்பனவு பெற்றுக்கொள்வதற்காக போதியளவு மேலதிக நேர வேலை உரிய முறையில் மற்றும் நியாயமாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என கண்டறிந்து பொறுப்பு சொல்ல வேண்டிய உத்தியோகத்தர் ஒருவரால் திருப்பி அடைய வேண்டும் அதற்காக உரிய வேலை அளவு நிறைவேற்றப்படுகின்றது எனவும், செயற்படாமல் நேரத்திற்காக மேலதிக நேரக் கொடுப்பனவு | புதிய கணினி முறைமைகள் மற்றும் நிருவாகத்தை மையப்படுத்தும் அலுவல்கள் செயற்படாமையால் ஒவ்வொரு பிரிவுகளும் அலுவல அலுவல்களுக்காக முகாமைத்துவ உதவியாளர்களின் சேவை தேவைப்பாடு காணப்படுகின்றமையால் மேற்கூறியவாறு மிகை என காணக்கூடிய முகாமைத்துவ உதவியாளர்களுக்காக நாளாந்தம் நிறைவேற்றுவதற்கு கடமைகள் காணப்படுகின்றது.<br><br>2012 ஆண்டு தயாரிக்கப்பட்டு 2013.01.23 திகதி முகாமைத்துவ சேவைத் திணைக்களத்தின் மூலம் அங்கீகரிக்கப்பட்டிருந்த பதவியணியின் பல்வேறு உதவியாளர்கள், சுகாதார ஊழியர்கள் நிழல் பிரதி இயந்திர இயக்குனர்கள், சமையலறை உதவியாளர்கள் ஆகிய பதவிகள் இதில் அடங்கியிருக்கவில்லை. அந்த பதவிகள் மற்றும் மேலும் பல பதவிகளுக்காக வேலை உதவியாளர் பதவிகள் புதிதாக ஏற்படுத்தப்பட்டது. எனினும், தற்போது இருக்கும் ஊழியர்கள் அந்தப் பதவிப் பெயரிலே காணப்படுகின்றமையால் அவர்கள் மிகை என சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. | முகாமைத்துவத்தினால் பதவியணியை ஆக்கபூர்வமாக சேவைகளில் ஈடுபடுத்தி மேலதிக கொடுப்பனவுச் செலவினை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டியதுடன், மேலதிக நேர வேலை முன்கூட்டியே அனுமதித்தல் மற்றும் செய்த வேலை அறிக்கைகள் பேணிச் செல்வதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

| | | | |
|---|---|---|---|
| | செலுத்தப்படவில்லை எனவும் பொறுப்புச் சொல்வதற்காக முறையான பரிசோதனைகள் மற்றும் அறிக்கைகள் வைத்திருக்கும் முறைமை ஒன்று தயாரிக்கப்பட வேண்டும். எனினும், மேற்கூறிய மேலதிக நேர கொடுப்பனவு தொடர்பாக செய்த வேலை அறிக்கை கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | | |
| (ஆ) | 2011 ஆண்டின் போது இலங்கை சுங்கத்தினால் அறிவித்தல் ஏதும் இன்றி அதிகார சபையினால் இறக்குமதி செய்திருந்த 27 பாரம்தூக்கிப் பொறிகள் தொடர்பாக சுங்கத்தினால் விதிக்கப்பட்டிருந்த ரூபா 1,580 மில்லியன் தொகைக்கான சுங்கத் தண்டப்பணத்தை இலகுவாக்கிக் கொள்வதற்காக சுங்கக் கட்டளைச் சட்டத்தின் 165 ஆம் பிரிவின் பிரகாரம் சுங்க விசாரணை ஒன்றின் தீர்மானத்தின் மீது நிதி அமைச்சருக்கு மேன்முறையீடொன்று மேற்கொள்ளக்கூடியதாக இருந்த போதிலும், அதிகார சபையினால் அமைச்சருக்கு அவ்வாறான மேன்முறையீடொன்று சமர்ப்பித்திருக்கவில்லை. எவ்வாறாயினும், இது தொடர்பாக கணக்குகளில் ரூபா 957.9 மில்லியனிற்கான நிகழத்தக்க பொறுப்புக்கள் ஒதுக்கப்பட்டிருந்தது. மேற்கூறிய விடயங்கள் தொடர்பாக அதிகாரசபை மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட்டதுடன், மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் தீர்ப்பிற்கு எதிராக 2020 ஆண்டின் போது அதிகார சபையினால் மேன்முறையீட்டு மனு ஒன்று உயர் நீதிமன்றத்தில் கோப்பிடப்பட்டிருந்தது. எவ்வாறாயினும், 2022 மார்ச் 09 திகதி நிதி அமைச்சின் வாணிப மற்றும் முதலீட்டுக் கொள்கை திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தின் கடிதத்தின் படி அமைச்சரவை தீர்மானத்தின் மீது | மேன்முறையீட்டு நீதிமன்றத்தின் கட்டளைக்கு எதிராக 2018 ஆண்டின் போது அதிகார சபையினால் 2020.02.02 திகதி ‘‘பிரேரணையொன்று’’ உயர் நீதிமன்றத்தில் கோப்பிலிடப்பட்டிருந்தது என அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருந்த போதிலும், அது பிரேரணையொன்றல்ல ‘‘மேன்முறையீட்டு மனுவொன்று’’ என சரி செய்யப்பட வேண்டும். | தொடர்புடைய நிறுவனங்கள் அரச நிறுவனங்கள் என்ற காரணத்தினால் பிணக்கு நியாயமான அடிப்படையில் கூடிய விரைவில் தீர்த்து முடிவுக்கு கொண்டுவருவதற்கு தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | சுங்கத் தண்டப்பணம் ரூபா 50 மில்லியன் தொகை வரை குறைப்பதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. | | |
| (இ) | அதிகார சபையினால் சமர்ப்பிக்கப்பட்ட தகவல்களின் படி இலங்கை துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான 3 ஏக்கர் 6.46 பர்சஸ் தொகை மற்றும் 145.130 சதுரமீற்றர் தரைப் பகுதியைக் கொண்ட 14 காணித் துண்டுகளுக்காக கையொப்பமிடப்பட்ட லீஸிங் உடன்படிக்கைகளில் (Leasing Agreements) உடன்பட்ட காலப் பகுதிகள் 2021 திசெம்பர் 31 திகதி அளவிலும் முடிவடைந்திருந்தது. அவ்வாறாயினும், உடன்படிக்கையை நாளதுவரை ஆக்கிக்கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் அதிகார சபையினால் மேற்கொண்டிருக்காமையினால் சட்டச் சிக்கல்கள் ஏற்படக்கூடிய ஆபத்து நிலையை கணக்காய்வில் தவிர்க்க முடியாதுள்ளது என. | இலங்கை துறைமுக அதிகார சபையினால் கையொப்பமிடப்பட்டுள்ள லீஸங் உடன்படிக்கைகள் 03, 05 வருடங்கள் என குறுகிய கால மற்றும் 30 வருடங்கள் மற்றும் 35 வருடங்கள் என நீண்ட காலத்தையுடையவையாக காணப்பட்டது. இந்த அனைத்து உடன்படிக்கைகளும் முடிவடைவதற்கு குறைந்தது 03 மாதங்களுக்கு முன்னர் மீண்டும் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காக தேவையான அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளது என.<br><br>எனினும், மீண்டும் குத்தகைக்கு கொடுக்கும் போது பெறுமதி மதிப்பீட்டு அறிக்கை வழங்குவதில் கணிசமான கால தாமதம் ஒன்று பெறுமதி மதிப்பீட்டுத் திணைக்களத்தினால் மேற்கொள்ளப்படும் சந்தர்ப்பங்கள் காணப்படுகின்றன. அதேபோல், சிற்சில நிறுவாகம்சார் காரணங்களினால் தேவையான அங்கீகாரம் தாமதம் அடையும் சந்தர்ப்பங்கள் தவிர ஏனைய அனைத்து சந்தர்ப்பங்களிலும் குறிப்பிட்ட காலப் பகுதியில் உடன்படிக்கைகளை புதுப்பிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. | லீஸிங் உடன்படிக்கைகள் நாளதுவரை ஆக்கப்பட்டு பேணிச் செல்லல் அதிகார சபையின் பொறுப்பொன்றாகும் என. |
| (ஈ) | நில அளவைப்பட இலக்கம் சீஓ/சீஓஎல்/2012/1047 இலக்கம் கொண்ட கொழும்பு டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையில் அமைந்துள்ள ரூபா 604.5 மில்லியன் பெறுமதியான 2 ஏக்கர் 3 ரூட் 9.61 பர்சஸ் அளவுள்ள | துறைமுக அதிகார சபைக்கு சொந்தமான கொழும்பு 10 டீ.ஆர். விஜேவர்தன மாவத்தையில் தாமரை கோபுரம் நிர்மாணிக்கப்பட்டுள்ள தரைப்பகுதி காணி | முறைப் பிரகாரம் காணிகளை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு குறிப்பிட்ட சொத்துக்களை |

| | | | |
|---|---|---|---|
| | காணி காணி தாமரைக் கோபுரம் நிர்மாணிப்பதற்காக நகர அபிவிருத்தி அதிகார சபைக்கு அனுபவிக்கும் உரிமையை ஒப்படைத்திருந்த போதிலும், முறையான செயற்பாடுகளின் மூலம் பெறுமதியை புத்தகத்திலிருந்து அகற்றி காணி உறுதியொன்றின் மூலம் காணியை உரித்தாக்கியிருக்கவில்லை. | தனதாக்கல் சட்டத்தின் 38(ஆ) பிரிவின் படி நகர அபிவிருத்தி அதிகார சபையினால் அனுபவிக்கும் உரிமையை பெற்றிருந்த போதிலும், நட்டஈட்டு விசாரணையின் தீர்மானம் வழங்கியிருக்கவில்லை. காணியின் நட்டஈடு வழங்கல் தொடர்பாக தீர்மானிப்பதற்காக பிரதேச செயலாளரினால் சட்டமா அதிபருக்கு வழக்கொன்று தாக்கல் செய்வதற்காக அனுப்பப்பட்டுள்ளது என எங்களுக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. | புத்தகத்தில் இருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |
| (உ) | காணி வரைபட இலக்கம் எல்/எஸ்/எம்ஜஎஸ்/344 கொண்ட கொழும்பு 01 பிரதான வீதிக்கு மற்றும் ஓல்கொட் மாவத்தைக்கு எல்லையாக அமைந்துள்ள ரூபா 947.5 மில்லியன் பெறுமதியான 02 ஏக்கர் காணி சுங்கத் திணைக்களத்திற்கு கட்டிடம் ஒன்று நிர்மாணிப்பதற்காக வழங்கியிருந்த போதிலும், காணியை பெறுமதி மதிப்பீடு செய்து சட்டரீதியாக உரித்தாக்குவதற்காக மற்றும் பெறுமதியை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்காக 2022 ஜூன் 30 திகதி வரை நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | சுங்கத் திணைக்களத்தின் தலைமை அலுவலகம் நிர்மாணிப்பதற்காக துறைமுக அதிகார சபை வழங்கியிருந்த 02 ஏக்கர் காணிக்காக பரிமாற்றம் என சுங்கத் திணைக்களத்திற்கு சொந்தமாக இருந்த தூபத்திற்கு அண்மையிலுள்ள 94 பர்சஸ் காணி 1981 ஆண்டில் 01 ஆம் இலக்க வாயில் நிர்மாணிக்கும் போது வழங்கியிருந்தமையால் அவை ஒன்வொன்றையும் பெறுமதி மதிப்பீடு செய்து வித்தியாசம் ஒன்று காணப்படின் பணம் செலுத்தி தீர்த்துக்கொள்வதற்கு ஆரம்பக் கலந்துரையாடலின் போது இணக்கத்திற்கு வந்திருந்தது.<br><br>பின்னர் இந்த அலுவல்கள் மேற்கொள்ளப்பட்டு வந்த போது மேற்கூறிய 94 பர்சஸ் காணியும் இலங்கை துறைமுக அதிகார சபைக்கே சொந்தமானது என்ற விடயம் கண்டறியப்பட்டது. இதன் காரணமாக இந்தக் காணிப் பரிமாற்றம் தொடர்பாக இறுதித் தீர்மானம் ஒன்றிற்கு வருவதற்கு முடியாமல் இருந்தது. | முறையான செய்முறை ஒன்றின் படி இணக்கமொன்றிற்கு வந்து காணியை உரித்தாக்கும் அலுவல்கள் மேற்கொண்டு குறிப்பிட்ட சொத்துக்களை புத்தகங்களிலிருந்து அகற்றுவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என. |

(ஈ) தெற்குப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்யும் குறிக்கோளுடன் காலித் துறைமுகத்தில் பல்கரும முடிவுமுனையொன்று நிர்மாணிப்பதற்காக 2006 மார்ச் 28 திகதி இலங்கை அரசாங்கம் மற்றும் சர்வதேச ஒத்துழைப்புக்கான ஜப்பானிய வங்கி (JBIC) இடையே ஏற்படுத்தியிருந்த கடன் உடன்படிக்கையின் கீழ் செயற்படுத்துவதற்கு இணங்கியிருந்தது. உலக மரபுரிமை என பெயரிடப்பட்டுள்ள காலிக் கோட்டையை அன்றிய இந்த நிர்மாண வேலையை மேற்கொள்வதற்காக யுனெஸ்கோ (UNESCO) அமைப்பில் அங்கீகாரம் பெற வேண்டியிருந்தது. அதற்காக 03 வருடத்திற்கு மிகையான காலம் எடுக்கப்படும் என்ற காரணத்தினால் கடன் வழங்குனரினால் கால வரையறை நீடிக்காமையால் இந்த செயற்திட்டத்தை இடை நிறுத்துவதற்காக தீர்மானிக்கப்பட்டிருந்தது. இதன்படி, இதற்காக செலவிடப்பட்டிருந்த ரூபா 418 மில்லியனிற்கான உசாத்துணைக் கட்டணம் 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு அதிகார சபையின் நிதிக் கூற்றுக்களில் நடைபெறு வேலையின் கீழ் காட்டப்பட்டிருந்தது. இது தொடர்பாக அதிகார சபையினால் கணக்காய்வுக் குழு எடுத்த தீர்மானத்தின் படி இந்தத் தொகையினை கணக்கீடு செய்ய வேண்டிய முறை தொடர்பாக இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியம மீளாய்வு சபையிடம் 2021 ஏப்ரல் மாதம் 04 திகதி அதிகார சபை வினவி இருந்த போதிலும், அதற்கான ஆலோசனைகள் இதுவரை கிடைத்திருக்காததுடன், அந்தச் செலவு மூலதன அல்லது வருவாய்ச் செலவு என 2021 திசெம்பர் 31 திகதி வரை இனங்கண்டிருக்கவில்லை.

உசாத்துணைக் கட்டணம் என செலுத்தப்பட்டிருந்த தொகை அதிகார சபையின் 2021 ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் நடைபெறு வேலைகளின் கீழ் காட்டப்பட்டுள்ளதுடன், இதற்கான கணக்கீடு செய்ய வேண்டிய முறை தொடர்பாக அறிவுரை பெற்றுக்கொள்வதற்காக SLAASMB இற்கு அனுப்பப்பட்டுள்ளது.

செலவுகளின் தன்மை எதிர்கால எதிர்ப்பார்ப்புக்கள் ஆகியவற்றை கவனத்தில் எடுத்து இலங்கை கணக்கீட்டு நியமங்களின் பிரகாரம் அறிவுசார் விதமாக செலவுகளை கணக்கீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும்.

| | | | |
|---|---|---|---|
| (எ) | ஹம்பாந்தோட்டை துறைமுக செயற்திட்டத்திற்காக காணிகள் தனதாக்கியமைக்காக காணிகளை இழந்தவர்களுக்கு நட்டஈடு வழங்குவதற்காக 2015 மற்றும் 2016 ஆண்டுகளின் போது ரூபா 108.77 மில்லியன் தொகையொன்று ஹம்பாந்தோட்டை பிரதேச செயலகத்திற்கு வழங்கப்பட்டிருந்ததுடன், வெளிக்கள கடமைகளுக்காக மற்றும் காணியை சுத்தம் செய்வதற்காக 2014 ஆண்டின் போது ரூபா 4.39 மில்லியன் தொகை செலவிடப்பட்டிருந்தது. 2021 ஏப்ரல் 30 திகதி அளவில் குறிப்பிட்ட நட்டஈடு வழங்கல் தொடர்பான அறிக்கை அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும் குறிப்பிட்ட காணிகளின் உரிமையை அதிகார சபைக்கு உரித்தாக்குவதற்காக நடவடிக்கை எடுத்திருக்கவில்லை. | அளவை வரைபு மற்றும் குறிப்பிட்ட ஏனைய ஆவணங்கள் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரினால் காணி ஆணையாளர் நாயத்தினூடாக காணி அமைச்சுக்கு தற்போது அனுப்பப்பட்டுள்ளது. அதன்படி, காணிகளின் உரிமை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு உரித்தாக்குவதற்காக தேவையான நடவடிக்கைகள் ஹம்பாந்தோட்டை மாவட்ட செயலாளரினால் எடுக்கப்பட்டு வருகின்றது. | சட்டரீதியாக காணிகளை உரித்தாக்கி, உரித்தாக்கிய காணிகளின் பெறுமதியை காணி விடுவிப்புக் கணக்கிலிருந்து முதலீட்டுக் காணிகள் கணக்கிற்கு மாற்றுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என. |
| (ஏ) | 2019 திசெம்பர் 04 திகதி கப்பல் ஒன்று துறைமுக ஜயகொள்கலன் முடிவுமுனையில் நீர்த்தடுப்பு (Caisson), வேகக் கட்டுப்பாடுகள் (Fenders), துறைமுக மேடைச் சுவர் (Quay wall) சேதம் ஏற்பட்டிருந்தது. இச் சேதம் ரூபா 315.90 மில்லியன் தொகை என மதிப்பீடு செய்யப்பட்டிருந்தது. மேற்கூறிய சேதம் தொடர்பாக ரூபா 384.42 மில்லியன் தொகை ஒன்று 2019 திசெம்பர் 30 திகதி இலங்கை துறைமுக அதிகார சபைக்கு கிடைத்திருந்த போதிலும் வேகத்தடுப்பை தவிர ஏனைய திருத்த வேலை அலுவல்கள் இதுவரை மேற்கொண்டிருக்கவில்லை. | இந்த விபத்தின் போது சேதமடைந்திருந்த வேகக் கட்டுப்பாடுகள் (Fenders) மீள்கட்டமைக்கப்பட்டிருந்தது. ஏனைய திருத்த வேலை அலுவல்கள் மேற்கொள்வதற்காக தேவையான இயந்திர உபகரண வசதிகள் துறைமுக அதிகார சபையிடம் காணப்படாமையால் அது வெளி ஒப்பந்தக்காரர் ஒருவரை தொடர்புகொண்டு மேற்கொள்ளப்பட வேண்டியிருந்தது. | இழப்பீட்டிற்காக கிடைத்திருந்த நட்டஈட்டுத் தொகையை பயன்படுத்தி பொருத்தமான முறையில் திட்டமிட்டு குறிப்பிட்ட திருத்த வேலை அலுவல்களை தாமதம் இன்றி மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும். |

**3.2 செயற்பாட்டுத் திறமையின்மை**

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| கொழும்பு துறைமுகத்தில் தற்போது கொள்கலன்களை கையாளுவதற்காக செயற்படுத்தப்பட்டுள்ள முடிவுமுனை இடையே ஆழமான (Draft) 14.25 | கிழக்கு முடிவுமுனை கொள்கலன் துணைக் கருவிகளுக்காக செலுத்த வேண்டிய முற்பணத் தொகையில் | முடிவுமுனையின் செயற்பாட்டுக் கொள்திறனை உச்ச அளவில் |

மீற்றரை விட கூடிய கப்பல்கள் வரக்கூடிய முடிவுமுனைகளாவன கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை (CICT) மற்றும் கிழக்கு கொள்கலன் முடிவுமுனை (ECT) ஆகும். கொழும்பு சர்வதேச கொள்கலன் முடிவுமுனை இயலளவு ஒரு வருடத்திற்கு இருபது சம அளவுகள் 2.4 மில்லியன் தொகையாகும். 2021 ஆண்டின் போது அந்த முடிவுமுனையிற்கு 270 கப்பல்கள் வந்திருந்ததுடன், மொத்த கொள்கலன் அலகு 3.2 மில்லியனை விட கூடிய எண்ணிக்கை ஒன்றினை செயற்படுத்தியிருந்தது. அது உச்சமட்ட இயலளவை மிகைத்திருந்ததென அவதானிக்கப்பட்டது.

கொழும்பு துறைமுகத்தை விசாலமாக்கும் செயற்திட்டத்திற்காக இலங்கை வங்கியில் நிதி ஏற்பாட்டுடன் கொள்கலன் அலகு 0.8 மில்லியன் வருடாந்த இயலளவு ஒன்றுடன் நிர்மாணிப்பதற்காக ரூபா 11,168 மில்லியன் கிரயத்திற்காக 18 மீற்றர் ஆழத்தையுடைய மற்றும் 440 மீற்றர் நீலத்தையுடைய கிழக்கு கொள்கலன் முடிவுமுனை கட்டம் I நிர்மாண வேலைகள் 2016 ஏப்ரல் மாதத்தில் பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அமைச்சரவை தீர்மானத்தின் படி ஜய கொள்கலன் முடிவுமுனைக்காக கொள்வனவு செய்யப்பட்ட கப்பலில் இருந்து தரைக்கு செயற்பாட்டலுவல்கள் மேற்கொள்ளக்கூடிய மூன்று பாரந்தூக்கிப் பொறிகள் 2020 பெப்ரவரி 07 திகதிய PA/HD/25 இலக்கம் கொண்ட பணிப்பாளர் சபை தீர்மானத்தின் படி கிழக்கு கொள்கலன் முடிவுமுனையில் (ECT) பொருத்தி அதன் செயற்பாட்டு அலுவல்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. பின்னர் அதற்காக அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டிருந்தது. அதன்பின், 2021 பெப்ரவரி 09 திகதிய அமப/21/0198/328/005/டீபீஆர் இலக்கம் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் மூலம் கிழக்கு கொள்கலன் முடிவுமுனையை அபிவிருத்தி செய்தல் செயற்பாட்டு உபகரணங்கள் கொள்வனவு செய்வதற்காக மற்றும் இலங்கை துறைமுக அதிகார சபையின் முழுமையான உரிமையையுடைய கொள்கலன் முடிவுமுனை என செயற்பாட்டு அலுவல்கள் ஒரு பகுதி மாத்திரம் செலுத்தப்பட்டிருந்ததுடன், வெளிநாட்டுச் செலாவணி தட்டுப்பாட்டின் காரணமாக வங்கியினால் முற்பணத் தொகையின் மீதிப் பகுதி செலுத்தியிருக்கவில்லை. அதன் காரணமாக தொடர் வேலைகளில் தாமதம் ஒன்று ஏற்பட்டிருந்தது.

பயன்படுத்துவதற்காக அத்தியவசியமான கப்பலிலிருந்தே தரைவரை செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளக் கூடிய பாரிய அளவிலான பாரந்துக்கிப் பொறிக்கள் பெற்றுக்கொண்டு செயற்பாட்டு அலுவல்களை போட்டி அடிப்படையில் செயற்திறனுடன் மேற்கொள்ள வேண்டும் என மற்றும் அதற்கான அதிகார சபையின் சந்தைப் பங்கினை அதிகாரித்துக் கொள்வதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் என.

மேற்கொள்வதற்காக அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2021 ஆண்டின் போது 30 கொள்கலன் கப்பல்கள் (பாரிய அளவிலானவை அல்ல) முடிவுமுனைக்கு வருகை தந்தவுடன், 106,454 கொள்கலன்கள் செயற்படுத்தப்பட்டிருந்தது. இதன்படி, முடிவுமுனை பயன்பாடு 13.3 சதவீதம் மாத்திரம் காணப்பட்டது. முடிவுமுனையின் செயற்பாட்டு இயலளவினை உச்சமட்டமாக பயன்படுத்துவதற்கு தேவையான கப்பலில் இருந்தே தரைக்கு செயற்பாட்டலுவல்கள் மேற்கொள்வதற்கு பாரிய அளவிலான பாரந்தூக்கிப் பொறிகளை கொள்வனவு செய்வதற்காக ஒப்பந்தக்காரருடன் 282.56 மில்லியன் அமெரிக்கா டொலர்களுக்கான மதிப்பீட்டு கிரயத்திற்காக 2021 மே மாதத்தில் உடன்படிக்கைக்கு அணுகியிருந்ததுடன், 2021 திசெம்பர் 18 திகதி வழங்கல் ஒப்பந்தவேலை வழங்கப்பட்டிருந்தது. உடன்படிக்கையின் படி வேலை ஆயத்தம் செய்வதற்கான முற்பணம் 56.51 மில்லியன் அமெரிக்கா டொலர்கள் தொகை காணப்பட்ட போதும் அவற்றில் 2022 ஜூன் 20 திகதி வரை செலுத்தியிருந்த தொகை 18 மில்லியன் அமெரிக்க டொலராக காணப்பட்டதுடன், இணங்கியிருந்தவாறு மீதித்தொகை செலுத்தியிருக்கவில்லை. அதிகார சபையினால் வங்கிக்கு அதிகார சபையின் டொலர் கணக்கின் வைப்புக்கள் மூலம் குறிப்பிட்டுள்ளவாறு அந்தத் தொகையை விடுவிக்குமாறு அறிவுரை வழங்கப்பட்டிருந்த போதிலும் திரவத்தன்மை சிக்கல்கள் காரணமாக வங்கியினால் அந்தக் கொடுப்பனவு ஒப்பந்தக்காரர்களுக்கு விடுவித்திருக்கவில்லை. வேலை ஆயத்தப்படுத்துவதற்குரிய முற்பணத் தொகையை முழுமையாக செலுத்தியிருக்காமையால் திட்டமிடல் மீளாய்வுக்குழுக் கூட்டம் 2022 ஜூன் 20 திகதி வரை நாடாத்தியிருக்காததுடன் அதன்படி, உற்பத்தி அலுவல்களும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.3 சர்ச்சைக்குரிய கொடுக்கல் வாங்கல்கள்

| கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| இலங்கை துறைமுக அதிகார சபையினால் கப்பல் முகவர் நிலையங்களுக்காக இயலளவு தள்ளுபடி (Volume rebates) வழங்கும் போது இலங்கை துறைமுக அபிவிருத்தி அதிகார சபையுடன் முடிவுமுனை சேவை உடன்படிக்கை (Terminal service agreements) ஏற்படுத்தியிருந்த கப்பல் முகவர் நிலையங்களுக்காக உடன்படிக்கையில் இணங்கியிருந்த குறைந்தளவு செயற்பாட்டு வரையறை (Minimum TEU's to qualify for the rebates scheme) அடிப்படையாகக் கொள்வதுதுடன் 2020 ஆண்டின் போது அவ்வாறு நெருங்கவேண்டியிருந்த குறைந்த செயற்பாட்டு வரையறையை விட குறைந்த அளவு செயற்பாட்டு மட்டத்துடனான கப்பல் முகவர் நிலையங்களுக்காக பணிப்பாளர் சபை அங்கீகாரத்தின் கீழ் ரூபா 26.95 மில்லியன் இயலளவு தள்ளுபடி வழங்கப்பட்டிருந்தது. | பணிப்பாளர் சபையின் கீழ் வழங்கியிருந்த இயலளவு தொகை ரூபா 26,959,019 தொகையாகும். ஆண்டின் போது வழங்கியிருந்த ஏனைய அனைத்து இயலளவு தள்ளுபடி வழங்கியிருந்தது முடிவுமுனை சேவை உடன்படிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளை பூர்த்தி செய்த பின்னரே ஆகும். | முடிவுமுனை சேவை உடன்படிக்கை பிரகாரம் செயற்பட வேண்டும். |

## 3.4 மூலதன வேலைகளின் தாமதங்கள்

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | அதிகார சபையின் மூலம் தற்போது பிரதான செயற்பாட்டு அலுவல்கள் மேற்கொள்ளும் ஜய கொள்கல முடிவுமுனை நீளம் 600 மீற்றர் காணப்பட்டமையால் நீளம் 330 மீற்றர்களைக் கொண்ட பாரிய அளவிலான 02 கப்பல்கள் ஒரே தடவையில் செலுத்தல் இயலாமையின் காரணமாக அதிகார சபைக்கு வாணிப சந்தர்ப்பங்கள் இழக்கப்படுகின்றமையால் அந்த முடிவுமுனை 120 மீற்றர்களினால் நீடிப்பதற்கும் மற்றும் ஆழம் 15 மீற்றர்களினால் கப்பற்துறையை தயாரிப்பதற்கு 2017 ஜூலை மாதத்தில் அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்தது. 2018 நவம்பர் 29 திகதி துறைமுக அதிகார சபை மற்றும் | இணங்கவில்லை. ஒப்பந்த வேலையை திரும்ப ஆரம்பிப்பதற்குரிய கொள்கைசார் தீர்மானம் தொடர்புடைய 2020.09.28 திகதிய அமைச்சரவையினால் எடுக்கப்பட்ட தீர்மானம் மற்றும் அதனொடு தொடர்புடைய அமைச்சரவை விஞ்ஞாபனம் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. அவற்றில் தாமதத்திற்கான காரணம் குறிப்பிடப்பட்டுள்ளது. 2021 திசெம்பர் 31 திகதி அளவில் அங்கீகரிக்கப்பட்ட பௌதீக முன்னேற்றம் 30% என இணங்குகின்றேன். | ஒப்பந்த வேலை வழங்கப்பட்ட செயற்திட்டம் மீண்டும் கவனம் செலுத்துவதற்காக இரண்டு வருட காலம் கடந்திருந்ததுடன், அந்த சந்தர்ப்பத்தில் கிரயம் அதிகரிப்பு ஒன்று ஏற்பட்டிருக்காத போதிலும் தற்போது ஒப்பந்தக்காரரினால் விலை அதிகரித்தல் (Price escalation) கோரக்கூடியதாக இருப்பதனால் மேலதிக கிரயமொன்று அதிகார |

| | | | |
|---|---|---|---|
| | ஒப்பந்தக்காரர் (China Harbour Engineering Company Ltd) உடன் ஏற்படுத்தியிருந்த உடன்படிக்கையின் படி ஒப்பந்தக் கிரயம் ரூபா 5,035.30 (VAT இன்றிய) தொகை காணப்பட்டது. உடன்படிக்கையின் நிபந்தனை இலக்கம் 8.1 இன் படி, உடன்படிக்கை மேற்கொண்டு 7 நாட்களுக்கு குறையாத நாட்களுக்குள் ஒப்பந்த வேலையை ஆரம்பிக்கும் அறிவித்தல் ஒப்பந்தகாரருக்கு வழங்க வேண்டியிருந்த போதிலும், அதன் இரண்டு வருடங்களுக்கு பின்னர் 2020 நவம்பர் 23 திகதி திருத்தங்களுடன் (Addendum 1) வேலை ஆரம்பிக்கும் அறிவித்தல் வெளியிடப்பட்டிருந்தது. ஒப்பந்த வேலை தொடர்பாக மீண்டும் கலந்துரையாடலுக்கு இணைத்து திட்டமிட்டவாறு அபிவிருத்தி மேற்கொள்வதற்காக 2020 செப்தெம்பர் 29 ஆந் திகதிய 20/1403/328/001/TBR இலக்கங் கொண்ட அமைச்சரவை தீர்மானத்தின் கீழ் மீண்டும் அங்கீகாரம் பெற்றுக் கொள்ளல் இந்தத் தாமதத்திற்கு காரணமாகியிருந்தது. திருத்தத்தின் பின்னர் மேற்கூறிய ஒப்பந்தவேலை 2022 ஜூலை 23 திகதி அளவில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்பட்டது. எவ்வாறாயினும், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு இந்த செயற்திட்டத்தின் பௌதீக முன்னேற்றம் 30 சதவீதம் காணப்பட்டது. | | சபைக்கு மேற்கொள்வதற்கு நேரிடுகின்றது. செயற்திட்டத்தை வழங்குவதில் தாமதமடைதல் அதற்கான காரணமாக இருப்பதனால் தேவையற்ற முறையில் மூலதன செயற்திட்டங்களை தாமதப்படுத்தக்கூடாது என. |
| (ஆ) | வடக்கு கிழக்கு நுழைவு வலைய கருதுகோளை வெற்றிகொள்ளும் குறிக்கோளுடன் காங்கேசந்துறை துறைமுகத்தை மறுசீரமைப்பதற்காக 45.27 மில்லியன் அமெ.டொ. கடன் தொகை பெறுவதற்கு இலங்கை அரசாங்க மற்றும் இந்திய இறக்குமதி மற்றும் ஏற்றுமதி வங்கி (எக்சிம் வங்கி) இடையே டொலர் கடன்தொகுதி உடன்படிக்கை ஒன்றிற்கு 2018 ஜனவரி 10 திகதி கையொப்பமிடப்பட்டிருந்தது. 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு கடன் உடன்படிக்கை கையொப்பமிடப்பட்டு 4 வருடங்கள் கடந்திருந்த போதிலும் துறைமுகத்தின் நிர்மாண வேலைகள் இதுவரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்த தகவல்களின் படி 2020 மே மாதம் வரை காணியின் உரிமை தொடர்பான | இலங்கை அரசாங்கம் மற்றும் இந்திய எக்ஸிம் வங்கி இடையே டொலர் கடன் உடன்படிக்கையொன்று 2018 ஜனவரி மாதத்தில் கையொப்பமிடப்பட்டிருந்தது. கடன்தொகை இலங்கை துறைமுக அதிகார சபைக்கு வழங்குவதற்காக கடன் வழங்கும் உடன்படிக்கை ஒன்று 2018 ஒக்தோபர் மாதம் கையொப்பமிடப்பட்டிருந்தது.<br>• உசாத்துணை அலுவல்கள் (வடிவமைப்பு அலுவல்கள் உட்பட) மற்றும் நிர்மாண வேலைகள் ஆகிய இரண்டு பகுதிகளை செயற்திட்டம் கொண்டிருந்தது. | யதார்த்தமாக திட்டங்கள் தயாரிக்காமை மற்றும் திட்டமிடப்பட்டவாறு செயற்திட்டங்கள் செயற்படுத்தாமையால் ஈடுபாட்டுப் பொறுப்புக் கட்டணம் மற்றும் விலைத் தளம்பல்கள் போன்ற சிக்கனற்ற செலவுகள் மேற்கொள்ள நேரிடுகின்றதென. |

காணப்பட்ட சிக்கல் தீர்க்கப்பட்டிருக்காததுடன், அந்த மாதம் வரை துறைமுகத்தின் பாதுகாப்பு தொடர்பாக இசைவுச் சான்றிதழ் ஒன்று பெற்றுக் கொள்ள முடியாதிருந்தது. அந்த சான்றிதழ் பெற்ற பின்னர் 2020 ஒக்தோபர் மாதத்தில் முகாமைத்துவ மற்றும் ஆலோசனை சேவைக்கான ஒப்பந்த வேலை இந்திய கம்பனி ஒன்றிற்கு வழங்கப்பட்டிருந்தது. மேற்கூறிய செயற்திட்டத்தின் மறுசீரமைப்பு அலுவல்கள் 2021 செப்தெம்பர் மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் 2022 மே வரை ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை. 2021 ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கின் படி இந்த செயற்திட்டத்திற்காக 1,001 மில்லியன் தொகை செலவிடுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும் குறிப்பிட்ட ஆண்டில் 142.3 மில்லியன் மாத்திரம் செலவிடப்பட்டிருந்தது. அது எதிர்பார்க்கப்பட்ட மூலதனச் செலவில் 14.2 சதவீதமாகக் காணப்பட்டது. அதே போல், 2021 திசெம்பர் 31 திகதியில் உள்ளவாறு 45.27 மில்லியன் டொலருக்கான கடன் தொகையில் 0.745 மில்லியன் டொலர் செலவிடப்பட்டிருந்ததுடன், நிதியத்தை பயன்படுத்தியிருக்காத காரணத்தினால் கடன் உடன்படிக்கையின் 7.1 பந்தியின் பிரகாரம் ஒதுக்கப்பட்டிருந்த ஆனால் பெற்றுக் கொண்டிருக்காத கடன் தொகைக்காக ஈடுபாட்டுப் பொறுப்பு கட்டணம் (Commitment charges) என 9,537.34 அமெரிக்க டொலர் (ரூபா 1.94 மில்லியன்) தொகையொன்று இந்தியாவின் எக்சிம் வங்கிக்கு செலுத்துவதற்கு துறைமுக அதிகார சபைக்கு நேரிட்டிருந்ததுடன் அது சிக்கனமற்ற செலவொன்றென அவதானிக்கப்பட்டது.

- உசாத்துணை வேலைகளுக்காக பொருத்தமான ஒப்பந்தக்காரர் ஒருவரை தெரிவு செய்வதற்காக இந்தியாவின் எக்ஸிம் வங்கி முழுமையான தகைமையுடைய விலைகூறல்தாரர்களிடம் விண்ணப்பங்கள் அழைக்கப்பட்டு ஒரு விலைகூறல்தாரர் மாத்திரம் இந்தியாவின் எக்ஸின் வங்கியினால் தெரிவு செய்யப்பட்டு உசாத்துணை ஒப்பந்த வேலை வழங்குவதற்கு முன்னர் கலந்துரையாடப்பட வேண்டிய நிபந்தனைகள் பல காணப்பட்டன. அதன் காரணமாக தொழில்நுட்ப மதிப்பாய்வுக்குழு மற்றும் எதிர்பார்த்த விலைகூறல்தாரர்களிடையே கலந்துரையாடல் சுற்றுகள் பல நடாத்தப்பட்டன. உசாத்துணை உடன்படிக்கை கையொப்பமிடப்படுவதற்கு முன்னர் அந்த தீர்மானம், அமைச்சரவையினால் நியமனம் செய்யப்படும் நிரந்தர பெறுகைக்குழு, இலங்கை துறைமுக அதிகார சபை பணிப்பாளர் குழு மற்றும் அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப்பட்டது. இந்த செய்முறை பூர்த்தி செய்யப்பட்ட பின்னர் உசாத்துணை ஒப்பந்த வேலை 2020 ஒக்தோபர் 12 திகதி வழங்கப்பட்டிருந்தது.
- கொவிட் தொற்றுநோய் நிலைமை ஆரம்ப உசாத்துணைக் காலப்பகுதியுள் சீரற்ற காலநிலை (சூராவளி) நிலைமை ஏற்பட்ட காரணத்தினால் வேலைத்தள விசாரணை/ பெறுமதி மதிப்பீட்டு அலுவல்களுக்கு பாதிப்பு ஏற்பட்டதுடன், செயற்திட்டத்தின் முன்னேற்றம் தாமதம் அடைந்தது.

- ஆரம்ப திட்டத்தின் படி நிர்மாண வேலைகள் 2021 ஜூலை மாதம் ஆரம்பிப்பதற்கு திட்டமிடப்பட்டிருந்துடன், 2021 திசெம்பர் 31 திகதி வரை வேலைகள் 05 மாதங்களினால் தாமதம் அடைந்தது என.